உ

கடவுள் துணை.

# விவேகசிந்தாமணி

## மூலமும் - உரையும்.

இஃது

பலவித்வான்களாலியற்றியதை

மதுரை

தம்புசாமிநாயுடுவர்கள் குமாரர்

ம. நம்புசாமிநாயுடு அவர்களால்

பார்வையிட்டு.

திருகொகேலிப்பேட்டை

பரியளநாயதம்குரு

வ - மருதண்ணராவுத்தர்

அவர்களால்

சென்னை

ஆ - இரத்தினவேலுமுதலியாரது

வாணிவிலாஸ அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1897௵

Copy-right Registered.

# விளம்பரம்.

இந்நூல் சகல கனதனவான்களுக்குந் தெரிவிப்பது யாதெனில் —

இந்த (விவேகசிந்தாமணியை) இதுவரை அநேக அச்சுக்கூடத்தர்கள் செய்யுளாகவே அச்சிட்டு வருவதைசிலதமிழ்உபாத்தியாயர்களும் பள்ளிக்கூடத்து மாணாக்கர்களும், நெடுங்காலமாய் முயற்சிசெய்து உரையுடன் அச்சிட்டுத்தரவேணுமென்று என்னைக் கேட்டுக் கொண்டபடி சிலவித்வான்களால் ஒருவாறு உரையெழுதி அச்சிட்டிருப்பதால் வேண்டியவர்கள் அடியிற் கையொப்பமிட்டிருக்கிற என்னிடத்திலும் புஸ்தகக்கடைகளிலும் கிரயத்துக்குப் பெற்றுக்கொள்ளலாம்

இதன் விலை அணா 2

## கவனிப்பு

இப்புஸ்தகத்தை தமிழ் உபாத்தியாயர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பள்ளிக்கூடத்திற் படிக்கும் மாணாக்கருக்குப் பாடம்வைத்து வாசிக்கச்செய்வார்களென நம்புகின்றனன்.

இங்ஙனம்
வ. மருதண்ணராவுத்தர்
குஜிலி பிரம்பு ஒத்தவாடை நெ, 56.
சென்னை.

# ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகல கனவான்களுக்கும் அச்சுக்கூடத்தி பருக்கும் அறிவிப்பது யாதெனில் இந்த விவேகசிந் தாமணி மூலமும் - உரையும் அடியிற் கையொப்பமிட் டிருக்கிற என்னால் அச்சிட்டு ரிஜிஸ்தர் செய்திருப்பதனு லே இப் புஸ்தகத்தை என் அனுமதியின்றி யாதாமொருவ ரச்சிடுவரேல் 1867௵த்து 25-வது ஆக்டு 20-வது பிரிவு 6-வது உட்பிரிவின்படி யானோரும் நஷ்டத்தி ற்கும், பினலகோர்ட்டின்படி குற்றத்திற்கும், உத்தரவா திகளாக வேண்டுமென்பதைக் கவனிக்கக்கோருகிறேன்.

இப்படிக்கு

திருநெல்வேலிப்பேட்டை

பரிமளக்காரத்தெரு

ஸ்ரீ வ மருதண்ணாராவுத்தர்.

சிவமயம்.

பரமபதிதுணை

# விவேகசிந்தாமணி

## மூலமும் - உரையும்.

---

### கடவுள் வணக்கம்

வெண்பா.

அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற் றிற்பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம்—நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்துள் மேவுங்
கணபதியைக் கைதொழுதக் கால்.

(இதன்பொருள்.) திருவருணைக் கோபுரத்துள், எழுந்தருளப்பெற்ற விநாயகக்கடவுளை (பத்தியோடு) வணங்கிக்கரங்கூப்பி அஞ்சலிசெய்யில், சகலதுன்பங்களும் நீங்கும். வலிய ஆணவமலச் சேஷ்டையுமொழியும். இம்மையிற் றாயின்வயிற்றிற் கருத்தரித்துப் பிறந்ததற்குக் காரணமாய் நின்ற பிராரத்த வினையுமகலும். இப்பிறப்பில் தேடப்பட்ட ஆகாமியவினைகளும் போகும். என்றவாறு.

### அறுசீரடி யாசிரிய விருத்தம்.

ஆபத்துக் குதவாப்பிள்ளை யரும்பசிக் குதவாவன்னம், தாபத்தைத் தீராத்தண்ணீர் தரித்திர மறியாப்பெண்டிர், கோபத்தை யடக்காவேந்தன் குருமொழிகொள்ளாச்சீடன், பாபத்தைத் தீராத்தீர்த்தம் பயனில்லை யேழுந்தானே.

(இ-ள்.) ஆபத்துக்கு உதவாதபிள்ளையும், அரியபசிக்கு உதவாத அன்னமும், தாகவெப்பத்தைத் தீர்க்காத தண்ணீரும், வறுமையறியாமல் (அதிகசெலவுசெய்) மனைவியும், கோபத்தைத் தணிக்காத அரசனும், ஆசிரியன் (உபதேசித்த) மொழிகளைக் கொள்ளாத மாணாக்கனும், பாவங்களைத் தீர்க்காத தீர்த்தங்களும் ஆகிய இவ்வேழினாலும் பயனில்லை. எ - று. (க)

பிள்ளைதானே வயதின்மூத்தாற் பிதாவின்சொற் புத்திகேளான் கள்ளினற் குழலாள்மூத்தாற் கணவனைக் கருதிப்பாராள், தெள்ளற விச்சைகற்றுத் தேர்ந்திடினும் குருவைத் தேடான், உள்ளநோய் பிணிவிட்டாற் றாலுலகர் பண்டிதனைத் தேடார்.

(இ-ள்.) மைந்தரும் வயதுமுதிர்ந்தபின் தந்தைசொற் புத்திகேளார்கள், மலர் (மலர்க) கூந்தலையுடைய மனைவியரும் முதிர்ந்தபின் கணவர்களை மதிக்கமாட்டார்கள், மாணாக்கரும் தெரிந்து குற்றமறக் கல்வியைக் கற்றுக்கொண்டபின் ஆசிரியனைத் தேடார்கள், நோய்தீர்ந்தபின் உலகத்தினரும் வைத்தியனைத் தேடார்கள். எ - று. (உ)

குக்கலைப்பிடித்து நாவிக் கூண்டினி லடைத்துவைத்து, மிக்கதோர் மஞ்சள்பூசி மிகுமணஞ் செய்தாலுங்கான், அக்குலம் வேறதாமோ வதனிடம் புனுகுண்டாமோ, குக்கலே குக்கலல்லாற் குலந்தனிற் பெரியதாமோ.

(இ-ள்) புனுகுப்பூனை (வசிக்கத்தக்க) கூட்டினில் நாயை பிடித்து அடைத்துவைத்து, மேன்மையான மஞ்சள் முதலியவைகள்பூசி அதிக வாசனைகளை யூட்டினாலும் அது ஜாதியில் வேறாகுமா? அதனிடம் புனுகுண்டாகுமா? நாய் நாயாகுமல்லால வேறுபெரிய ஜாதியாமோ? (ஆகா) எ - று. (ங)

ஒப்புடன் முகமலர்ந்தே யுபசரித் துண்மைபேசி
உப்பில்லாக் கூழிட்டாலு முண்பதே யமிர்தமாகும்

முப்பழமொடு பாலன்னம் முகங்கடுத் திடுவாராயின்
கப்பிய பசியினோடு கடும்பசி யாகுந்தானே

(இ-ள்.) (யாவரும்) ஒப்பத்தக்க முகமலர்ச்சியோடு உபசாரஞ்செய்து உண்மையான மொழிகளைப்பேசி, உப்பில்லாக் கூழைவார்த்தாலும் (அது) உண்பவர்க்கு அமிர்தமேயாம். மா, பலா, வாழைமுதலிய முப்பழவர்க்கங்களோடு (உயர்ந்த) அன்னத்தை (அன்பிலாது) முகங்கடுத்து ஒருவர்கொடுப்பாராகில், அவை யுண்பவர்க்கு உள்ளபசியினும், மிகு பசியை யுண்டாக்குமல்லாமல் தணிக்காது எ - று. (எ)

கதிர்பெறு செந்நெல்வாடக் கார்குலங் கன்றிச்சென்று, சோதிநீர்க் கடலிற்பெய்யுங் கொள்கைபோற் றுலையத்தேடி, மதிதனம் படைத்தபேர்கள் வாழ்வோரை முகத்தைப்பாரார், நிதியிசப் படைத்தோர்க்கல்லா னிலையிலார்க் கீயமாட்டார்

(இ-ள்.) மேகக்கூட்டங்கள் சிவந்த நெற்பயிர்கள் (நீரின்றி) வாடுகக்கண்டும், அங்கு நீர்பொழியாது அலைகள் வீசாநின்ற சமுத்திரத்தினிடத்து பெய்யுந்தன்மைபோல, உலகத்தில் மதிக்கத்தக்க தனம் படைத்தவர்கள் அதிக நிதியுடையவர்க்கேயல்லால், நிலையிலாது வாடினோர் முகங்கண்டு கொடுக்கார்கள்.

ஆலிலை பூவுங்காயு மளிதருபழமு முண்டேல்
சாலவே பட்சியெல்லாந் தன்குடி யென்றேவாழும்
வாலிபர் வந்துதேடி வந்திப்பார் கோடிகோடி
ஆலிலை யாதிபோனா லங்குவந் திருப்பாருண்டோ.

(இ-ள்.) ஆலவிருட்சத்தி னிடத்து இலை, பூ, காய், இனிமை தரும்பழம் முதலியவைகளிருந்தால், மிகுதியாகப் பலபட்சிகளும் தமது இருப்பிடம் போல் கூடிவாழும், இலைமுதலியவை நீங்கி மரமட்டுநிற்கில், ஒரு பட்சியும் சேரா, அதுபோல மிகுந்த செல்வமிருக்கில் அளவிறந்தவர்கள் வந்துகூடி வந்தனம் செய்வார்கள். செல்வமில்லையேல் ஒருவருங் கூடார்கள்.

## அறுசீரடி யாசிரிய விருத்தம்.

பொருட்பாலை விரும்புவர்கள் காமப்பா லிடைமூழ்
கிப் புரள்வா ரகிதத்தி, னருட்பாலா மறப்பாலைக் கனவிலு
மே விரும்பார்க ளறிவொன் றில்லார், குருப்பாலக் கடவு
ளர்பால வேதியர்பாற் புரவலர்பாற் கொடுக்கக்கோரார்,
செருப்பாலே யடிப்பவர்க்கு விருப்பாலே கோடிசெம்
பொன் னீசவிந்தீவார்

(இ-ள்.) செல்வத்தினிடத்தே அதிக விருப்பங்கொள்பவர்கள், காமத்தினிடத்தே மூழ்கிப்புரள்வார்கள் அருளாகிய செல்வத்தைச் சற்றும் தருமத்தைக் கனவிலும் விரும்பார்கள். கொஞ்சமும் அறிவில்லாதவராய், ஆசாரியரிடத்தும், கடவுளிடத்தும், புலவோரிடத்தும், அரசர்களிடத்தும், (ஒரு பொருளும்) கொடுக்க நேரார்கள். கோடிச்செம்பொன்னாயினுந் தன்னைப் பாதரட்சையால் அடிப்பவர்க்கே ஆசையோடு வந்தனஞ்செய்து கொடுப்பார்கள். எ - று. (எ)

தண்டாமரையி னுடன்பிறந்து தண்டேனுகரா மண்
டூகம், வண்டோ கானத் திடையிருந்து வந்தே கமலமது
வுண்ணும், பண்டேபழகியிருந்தாலு மறியார் புல்லோர்
நல்லோரைக் கண்டே களித்தங் குறவாடித் தம்மிற்கலப்
பார் கற்றோரே.

(இ-ள்.) தவளையானது தன்னுடன் பிறந்து வளர்ந்திருக்கும் குளிர்ந்த தாமரையிலுள்ள தேனை உண்ணவறியாது காட்டிலிருந்த வண்டுகளோவந்து அந்தமதுவையுண்டு களிக்கும் (அதுபோல) நெடுநாள் பழகியிருக்கினும் கற்றோர் அருமையை அறிவிலார் அறியார். கற்றவரே அறிவர் எ - று. (அ)

வானரமழைக் கனி வனையத் தாக்கணை
தாவெறி நெறிசெலத் தாண்டிப் பயிற்றிடும்
ஞானமுங் கல்வியு நவின்ற நூல்களும்
ஈனருக் குரைத்திடி லிடர தாகுமே.

## மூலமும் - உரையும்.

(இ-ள்.) முன்னமே பிரயாசையாற் கூடுகட்டி வசித்திருந்த ஓர் தூக்கணாங்குருவி, வீணாகாலங்கழித்துத் திரிந்து வசிக்க இடமின்றி மழையில் நனைந்து வருந்திய ஒரு வானரத்தைக் கண்டு எனைப்போல ஓர் இருப்பிடம் செய்துக்கொள்ளலாகாதா, என்றவுடன, குரங்கு சினந்து அதன் கூண்டைப்பறித்தெறிந்ததுபோல, கலவியானிறைந்த ஞானநூல்களை அறிவிலோர்க் குரைத்திடில் துன்பமே உண்டாகும். எ - று.

## தலைவன் தலைவியைப் புகழ்தல்

வண்டுமொய்த் தனையகூந்தல் மதனபண் டாரவல்லி, கெண்டையோ டொத்தகண்ணாள் கிளிமொழி வாயிலூறல் கண்டுசர்க் கரையோதேனோ கனியொடு கலந்தபாகோ, அண்டர்மா முனிவர்க்கெல்லா மமுதமென் றளிக்கலாமே.

(இ-ள்.) வண்டுகள் மொய்த்திருந்தது போன்ற கூந்தலையும் கயலையொத்தகண்களையும், கிளிமொழியொத்த சொல்லையும் உடைய மன்மதபொக்கிஷமென்னும் பெயரையுடைய கொடி போன்றவளின் வாயினூறல், கற்கண்டோ சர்க்கரையோ, தேனோ, பழத்தொடுகலந்தபாலோ, (அறியேம ஆயினும்) தேவர் முனிவர்களுக்கெல்லாம் அமிர்தமென்று கொடுக்கலாம. எ-று.

கற்பகத் தருவைச்சார்ந்த காகமுமமுத முண்ணும், விற்பன விவேகமுள்ள வேந்தனைச்சேர்ந்தோர் வாழ்வர் இற்புலி தனைச்சேர்ந்த விலவுகாத் திடுங் கிளிபோல், அற்பரைச் சேர்ந்தோர்வாழ்வு தரித்திரமாகும் மா.

(இ-ள்.) கற்பக விருட்சத்தை அடுத்த காகமும் அமிர்தமுண்ணும் மிகுதியான அறிவுள்ள வேந்தனைச்சேர்ந்த (எளியரும) வாழ்வடைவார்கள். இலவுவிருட்சத்தின் காயைப்பார்த்

றப் பழுக்கும் பழுக்குமென்று காத்திருந்து அபலமடையுங் கிளையைப்போல அறபனைச்சேர்ந்தோருலகில் வாழ்வது அரிதி லுமரிதாகும, அமமா, வியப்பிடைச்சொல். எ - று. (கக

## எண்சீரடி யாசிரிய விருத்தம்

ஆலகால விடந்தனையுநமபலா மாற்றையும பெருங காற்றையு நமபலாங், கோலமாமத யானையை நம்பலாங் கொல்லுமவேஙகையைப புலியையு நமபலாங், காலனூர்விடு தூதரையுநமபலாங் கள்ளர் வேடா மறவரை நம்பலாஞ், சேலைகட்டிய மாதரைநமபினற் றெருவினின்று தியங்கி த்தவிப்பரே.

(இ-ள்.) ஆலகாலவிடம், ஆறு, பிரசண்டக்காற்று, அழகி ய பெரியமதயானை, கொலலத்தகக வேஙகை, புலி, எமனுலே வு தூதாகள், கள்ளா, வேடர், மறவா, இத்யாதி பேர்களையும், நமபினாலும், சேலைகட்டிய மஙகையரை (நம்பொணுது) நம்பு வரோல தெருவில நின்று மயஙகித்தவிப்பார்கள். எ - று. (கஉ)

சஙகுவெண் டாமரைக்குத் தந்தைதா யிரவிதண ணீர், அங்ஙனைத கொயதுவிட்டா லழுகச்செய தநீர் கொல்லும், தங்கவண் கரையிறபோட்டாற சூரியன் கா யந்துகொல்லுவான், தங்களி னிலைமைகெட்டா லிப்படித் தாயவாரே.

(இ-ள்.) சங்குபோலும் வெள்ளைத்தாமரைக்குச் சூரியனு ம, தண்ணீரும, பிதாமாதாக்களாகவிருக்கினும், அததாமரையை க கொய்துவிடில அந்நீரேயதனை அழுகச்செய்து கொல்லும் க ரையிலவிடில் சூரியன் காய்ந்துகொலவான், அதுபோலத்தங்க ளிலைவிட்டுப் பெயர்ந்தவர்கள் இவ்விதம்வருந்துவார்கள். எ-று

நாய்வாலை யளவெடுத்துப் பெருக்கித்தீட்டி னற்ற மிழை யெழுதவெழுத் தாணியாமோ, பேய்சுரைக்குஞ் சுரி காட்டைப பெருகவிருந்தள்ளிப பெரியவிளக்கேறறிவைத் தால வீடதாமோ, தாயவார்த்தை கேளாதசக சண்டிக

கென் சாற்றிடினு மூனுத்தகுணந் தவிரமாட்டான், நவா ரை யீயவொட்டானிவனுமீயா னெழுபிறபபினும கடை யாமிவன் பிறப்பே.

(இ-ள்.) நாயினது வாலை (எழுத்தாணி இலக்கணப்படி நீட்டிததிட்டினாலும்கல்ல தமிழ எழுத்துக்களை எழுதுங்கருவி யாகுமா, பேய்கள்வாழுஞ் சுடுகாட்டைக் கூட்டிததள்ளி பெரி தாகிய விளக்கேற்றி வைத்தாலும் வாசஞசெய்தற்குறிய வீடா குமா, தாய்மொழி கேளாதசகசண்டிக்கு எவ்விதம உரைநகினும உலோபகுணத்தை விடமாட்டான். கொடுப்பவரையுங்கொடுக் கவொட்டான தானுங்கொடான். இவனசென்மம, எழுவகைப் பிறபபினும சிறந்துவமடைநத கடைஜனமமேயாகும். எ-று.

வெட்டுவாள் விழுவாள்பொய்யே மேலவிழுந் தழு வாளபொய்யே, தம்பலந் தின்பாள்பொய்யே சாகுமோ வென்பாளபொய்யே, அம்பிலுங் கொடியகண்ணா ரானு சிநேகம்பாரீர், நமயின போகமெல்லாம் நாயினுங் கடையாவாமே.

(இ-ள்.) இயங்குவள், விழுவள் மேலவிழுந்தழுவள (தரித் துணவனை போல) எசிற்றம்பலத்தையுமுமைப்பள (மனறுபட்டோ கூட) இறபபேனெனபள, (இவையாவும) பொய்யே, இவ்விதச் சூாலங்களமைநத பலகவணங்களையுடைய, அமபினுங்கொடிய செய்கைகளைக்காட்டுங் கணகளையுள்ள மஙகையரை நமபி சுக ங்களெல்லாம் (மலமுணணுமு) நாயினுங் கீழபபட்டவரோயாவா.

கெறபகதான் மங்கையருக் கழகுகுறையு கேள்வி யில்லா வரசனுலகம பாழாம், குறபுதநி மந்திரியால் அரசினுக்கு சொற்கேளாப பிள்ளைகளாற் குலத்துக்கீனம், நறபுதநி கறபித்தா லற்பர்கேளார் நன்மைசெய்யாத்தீமை யுட னயந்துசெயவார், அறபரோட ிணங்கிவிடிற பெரு மைதாழு பெரியதவங் கோபத்தா லழிந்துபோமே.

(இ-ள.) மஙகையருக்கு கருப்பத்தால் அழகு குறையும். (நியாயமுறை) விசாரா அரசனால உலகுபாழாகும இராஜ

ங்கத்துக்கு துற்புத்தியுள்ள மந்திரிகளால கெடுதியுண்டாகும். அறிவிலார்க்கு நல்லபுத்திகளைச் சொன்னாலுங் கேளார். நன்மை செய்பவர்க்கு உடனே தீமையையே பாராட்டிச்செய்வார். (இவ்விதமான) சிறியவர்களோடு கூடினவர் மகிமை குறையும். கோபத்தினால் அருமையாகிய தவங்களும்சிதைந்து போம.

தன்னுடன பிறவாத்தமபி தன்னைப்பெறாத் தாயார் தந்தை, அன்னியரிடத்துச்செல்வ மரும்பொருள் வேசியாசை, மன்னிய வேட்டினகலவி மறுமனையாட்டி வாழ்க்கை, இன்னிவாங் கருமமாறு மிடுக்கததுக குதவாவன்றே.

(இ-ள்) உடன்பிறவாத சோதரன், தன்னைப்பெறாத தாய்தகப்பன், மறறொரிடத்திலுள்ள செல்வம பொருளிச்சை வேசியாசை. வட்டி யெழுதியிருக்கும கலவி அயலான மனைவியோடு கூடியவாழக்கை. இநத ஆறுவகைகளும தககசமையததுககு உதவமாட்டா. எ - று. (கங)

ஒருநாளைக்கு மிரணையு மொனறேகேளாய் ஈன்மையா யையரையு மனையுஞ்கேட்டேன், இருநாளுக்கு மூன்றுடனே யொன்றுஞ்சொல்லா யிமமொழியைக் கேட்டபடி யிந்தாய ராயின், பெருநாளுக்கு மறுநாளுக்கும் பெறுவாய பொல்லோ பிறனையோர் மொழிபுகல வேண்டாமென்றே சரி நாளும் பகதுமொரு பதினைந்தாலே சகிக்கமுடியாதினி யெனா சகியேமானே.

(இ-ள்.) ஆறுவது ராசி - கன்னி மூன்றுவது நாள் - செவ்வாய், பனிரண்டாவது நட்சேத்திரம் - உத்திரம. இருபத்தெட்டாவது வருடம் - ஜெய, இருபத்தொன்பதாவது ஆண்டு மன்மத. (கருதது) கன்னியே உன் செவ்வாயைக் கேட்டேன் ஒருத்திரம சொல்லாய். கேட்டபடி கொடுப்பாயாகில் ஜெயம பெறுவாய், வேறுபுகன்மொழி சொல்லக்கூடாது மன்மதவேதனை யினி யென்றால் சகிக்கமுடியாதுமானே, இந்த ஓவிரகமுற்றேன் கூறியது, எ - று. (கச)

## எழுசீரடி யாசிரிய விருத்தம்.

தேனுகாவண்டு மதுகனையுண்டு தியங்கியே கிடந்தைதக்கண்டு, தானதைச்சமபுவின் கனியென்று தடங்கையாலெடுத்துமுன்பார்த்தாள், வானுறுமதியம் வந்ததென்றெண்ணி மலர்க்கரங்குவியுமென்றஞ்சிப், போனதுவண்டோ பறந்ததோபழந்தான புதுமையோவிதுவெனப் புகன்றாள்.

(இ-ள்.) தேனையுண்ணத்தக்க வண்டுகள் அந்தமதுக்களையுண்டு, மயங்கிக் கிடந்ததைக்கண்ட (ஒருபெண்) அதை நாவற்பழமென்று விசாவித்த தனதுகையா லெடுத்துப்பார்த்தாள். அவ்வண்டு (அவள் முகத்தினழகால்) ஆகாயத்தின கண்ணுவள சந்திரன்வந்ததென்று நினைத்து அதனால அவள்கரமாகிய தாமரைமலர் மூடிக்கொள்ளுமென்று பயந்து பறந்தது, பினபு அம்மங்கை, பறந்துபோனது வண்டோ? பழமோ? அலலது யாதுபுதுமையோவென்று ஐயமுற்றுச்சொனனுள். (இதுஒருஸ்திரியின முகத்தையுங் கரத்தையும வியந்து கூறியது.) (கக)

கருதியநூல கல்லாதான மூடனுகும் கணக்கறிந்து பேசாதான் கசடனுகும, ஒருதொழிலு மிலலாதான்முகடியாகும் ஒன்றுக்கு முதவாதான் சோமபனுகும், பெரியோர்கண்முனனின்று மரநதைப்போலும பேசாமலிருப்பவனே பேயனுகும, பரிவுசொலித் தழுவினவன பசப்பனுகும பசிபபவருக் கிட்டுண்ணுன் பாவியாமே.

(இ-ள்.) மதிக்கத்தக்க நலல சாஸ்திரங்களைக் கல்லாதவன் மூடன. அளவறிநது பேசாதவன கசடன். ஒரு தொழிலு மில்லாதவன் மூதேவி. ஒன்றுக்கு முதவாதவன் சோம்பன். மரம் போலவணஙகாது, அறிவுடையோர் முன்பாகநின்று துதியாதிருபபவனே பேயன். (அன்பின்றி) அன்புபோற் காட்டித்தழுவுகின்றவன் பசப்புகின்றவன், பசியாளர்களுக்குக் கொடுத்துணணுதவன்பாவி. எ - று. (உ0)

தாங்கொணா வறுமைவந்தாற் சபைதனிற் செல்ல நாணும், வேங்கைபோல் வீரங்குன்றும் விருந்தினர்க்கா ணநாணும், பூங்கொடி மனையாட்கஞ்சும் புல்லருக்கிணங்க ஞ்செய்யும், ஓங்கிய வறிவுகுன்று முலகெலாம் பழிக்குந் தானே.

(இ-ள்.) பொறுப்பதற்கரிய தரித்திரம் (ஒருவனுக்கு) வந்தால் சபையிற்செல்ல வெட்கமாம். வேங்கைப்புலிபோலுள்ள வீரமுங்குறையும். விருந்தினரைப்பார்க்கவும் வெட்கமுண்டாம். புட்பக்கொடிபோன்ற (இடையையுடைய) தன்மனைவிக்கும் பயப்படவேண்டிவரும். அற்பர்களோடு கூட்டுறவுண்டாம். மேன்மேலும் வளர்த்தக்க அறிவும் குறையும். உலகமெல்லாம் பழித்தற்கிடமுண்டாம். எ - று. (உக)

அரும்புகோணி லதுமணங்குன்றுமோ
கரும்புகோணிற் கட்டியும்பாகுமாம்
இரும்புகோணில் யானையைவெல்லலாம்
நரம்புகோணில் நாமதற்கென்செய்வோம்.

(இ-ள்.) புட்பத்தரும்பு கோணலாயிருந்தாலும், அதின் மணம் குறையுமோ? குறையாது. கரும்புகோணலாயிருந்தாலும் வெல்லமும் பாகுமாகும். இரும்புகோணலானால் பெரியமதயானையையும் ஜெயிக்கலாம் (தேக) நரம்புகள்கோணி (கிரியாண திலைச ஒருவர்க்கெய்தில்) நாமென்னசெய்வோம். எ - று ()

அன்னையே யனையசோழி யறந்தனை வளர்க்குமாதே, உன்னையோருண்மைகேட்பே னுரைதெரிந் துரைத்தல்வேண்டும், என்னையே புணருவோர்க ளெனக்குமோ ரின்பநல்கிப, பொன்னையுங் கொடுத்துப்பாதப்போதினில் வீழ்வதேனோ.

(இ-ள்.) தாய்போலுங் கருணையுள்ள பாங்கி ஆகிய தருமகுணமுள்ள பெண்ணே? உன்னிடத்தில் ஒருண்மைகேட்கின்றேன். அதைத்தெளிந்து சொல்லவேண்டும்! அதாவது, என்னிடத்துக் கல்வியைவிரும்பினவர்கள் எனக்கும் இன்பத்தைக் கொடுத்துப் பொருளையுங்கொடுத்து எனது மலர்போன்றகாலில் வீழ்கின்றார்கள். யாதுகாரணம்? எ - று. (உஉ)

பொய்மெனப் பணைத்துவிம்மிப் போர்மதன் மயங்
கிவீழுங், கொம்மைமேசோ முலையினாளே கூறுவேனொன்று
கேணமோ, செம்மையிலறஞ் செய்யாதார் திரவியஞ் சி
தறவேணடி, நம்மையுங் கள்ளுஞ்சூதும நான்முகன் ப
டைத்தவாறே.

(இ-ள்.) பொலிவாகிபருத்து விம்முதலுற்று, வலிமை யுள்ள மன்மதனையும் மயங்கச்செய்யும வட்டவடிவான தனத்தையுடையவளே ? ஒன்று சொல்லுகிறேன் கேட்பாயாக, செவ்வையாகத் தருமஞ்செய்யாதவர்கள் பொருள்களெல்லாஞ் சிதறுதலடையும பொருட்டே நமபோன்ற வேசியரையும், கள்ளையும், சூதாடுதலையும, பிரமதேவன் படைபபித் திருக்கிறான். எ - று. இவ்விரணடு செய்யுட்களும ஒரு தொடர். (உச)

பொன்னொடு மணியுண்டானாற் புலையனுங் கிளைஞ
ரென்று, தன்னையும புகழ்ந்துகொண்டு சாதியின்மணமு
ஞ் செய்வர், மன்னரா யிருநதபேர்கள் வகைகெட்டுப்
போவாராயின், பின்னையு மாரோவென்று பேசுவாரோசு
வாரே.

(இ-ள்.) பொருளும் புகழும் (ஒருவனுக்கு) உண்டானால் அவன் புலையனாகினும, தன் சுற்றத்தானென்று புகழ்ந்துகொணடு உயர்ந்த சாதியிலும் மணமுடிப்பார்கள், அரசராயிருந்தவரும் யாதொருவழியுமின்றிக் கெட்டுப்போவாராகில அவரை யாரோவென்று இகழ்ச்சி பேசுவார்கள். எ - று. (உரு)

## கலிவிருத்தம்.

வேதமோதிய வேதியர்க்கோர்மழை
நீதிமன்னர் நெறியினுக்கோர்மழை
மாதர்கற்புடை மங்கையர்க்கோர்மழை
மாதமூன்று மழையெனப்பெய்யுமே.

(இ-ள) வேதமோதுகின்ற அந்தணருக்கு ஒரு மழை, நீதிவழிதப்பாத அரசர்களுக்கு ஒரு மழை, அழகிய கற்பிற்சிறந்த மஙகையருக்கு ஒருமழையாக ஒவ்வொருமாதத்திலும் மூன்றுமழை வருஷிக்கும். எ - று. (உசு)

அரிசிவிற்றிடு மாதணர்க்கோர்மழை
வரிசைதப்பிய மன்னருக்கோர்மழை
புருஷனைக்கொன்ற பூவையர்க்கோர்மழை
வருஷமூன்று மழையெனப்பெய்யுமே.

(இ-ள்) (தற்காலம்) அரிசிவிற்பனைசெய்கின்ற பிராமணர்களுக்கு ஒரு மழை, நியாயந்தவறிய ராஜாகளுக்கு ஒருமழை, கணவனைகொல்லும் பெண்களுக்கு ஒரு மழையாக ஒவ்வொருவருடத்திலும் மூன்றுமழை பொழிகின்றன. எ - று (உஎ)

## அறுசீரடி யாசிரிய விருத்தம்.

திருப்பதி மிதியாப்பாதஞ் சிவனடி வணங்காச் சென்னி, இரப்பவர்க கீயாக்கைக ளினியசொற் கேளாக்காது, புரப்பவர் தங்கள்கண்ணீர் பொழிதரச் சாகாத்தேகம, இருப்பினும் பயனென்காட்டி லெரிப்பினு மில்லைதானே.

(இ.ள்.) ஸ்ரீ சிவபெருமான் எழுந்தருளியிருக்குந் திவ்ய க்ஷேத்திரஙகளை மிதியாதான பாதமும், சிவபெருமானுடைய பததை வணஙகாதாண்தலையும், யாசிப்பவருக்குக் கொடாதான் கைகளும், இனிமையான சொற்களைக்கேளாதான் செவியும, தஙகளை ரட்சிக்கின்றவர்கள் கணகளிலிருந்து ஜலமொழுகப் பார்ததும உயிர கொடாதான் தேகமும, இருந்தும பயனென்ன, காட்டில வைதது எரிததிடினும பயனில்லை. எ - று. ()

தன்னுடல் தனக்கொன்றீந்தால் தக்கதோர் பலமதாகும், மினனியல வேசிக்கீந்தால் மெய்யிலே வியாதியாகும், மன்னிய வுறவுக்கீய்ந்தால் வருவது மயககமாகும், அன்னிய பரந்துக்கீயந்தா லாருயிர்க் குதவியாமே.

(இ-ள.) தன் தேகத்துக்கு ஒன்றைக்கொடுக்கில் அதற்குத்தக்க பலமுணடாகும் மின்னலைப்போல அன்பைககாட்டி மறைககும் இயல்புள்ள வேசையருக்குக் கொடுத்தால தேகத்திற் பிணியுண்டாகும். பொருந்திய உறவினருக்குக் கொடுத்தால

மனமயக்கமேவருவதாகும். அன்னியருக்குக் கொடுத்தால் சார்ந்த உயிர்த்துணையாகும். எ - று. (உக)

படியினபொழுதே வதைத்திடு பச்சை நாவியை
நம்பலாம், பழிநமக்கென வழிமறித்திடுபழைய நீலியை
நம்பலாங், கொடுமதக்குவட்டென வளர்ந்திடு குஞ்சரத்
தையு நம்பலாங், குலுங்கப்பேசி நகைத்திடுஞ்சிறு கும
ரர்தம்மையு நம்பலாங், கடையிலக்கமு மெழுதிவிட்ட க
ணக்கர்தம்மையு நம்பலாங், காக்கைபோல்விழி பார்த்தி
டுங்குடி காணியாளரை நம்பலாம், நடைகுலுக்கியு முகமி
னுக்கியு நகைநகைத்திடு மாதரை, நம்பொணாதுமெய்நம
பொணாதுமெய் நம்பொணாதுமெய் காணுமே

(இ-ள்.) உலகத்தில் உண்டபொழுதே கொல்லத்தக்க விடத்தையும், பழியைக்கருதாது ஓர் வணிகனை வழிமறித்துக் கொலைசெய்த பழையனூர்நீலியையும், கொடிய மும்மதங்களையுடைய மலைபோன்று வளர்கின்ற யானையையும், குலுக்கிப் பேசிச்சிரித்து ஏமாற்றும் யௌவனச் சிறுவரையும், குடிகளுக்குக் கணக்கின் உளவுபணத்தைக்காட்டாமல் மோசவகையாய்த் தான் எழுதிவைத்துக் கட்டித்தொகையைக்காட்டி வஞ்சிக்கும் கணக்கர்களையும், ஒரே விழியையுடையதாயிருந்தும் கூரியபார்வையை யுடையதான காக்கையைப்போலப் பயிரிடுங் குடிகளுக்கு யாதொரு ஆதாயமுங் கிட்டாதபடி கட்டிக்கார்க்கும் காணியாட்சியை யுடையவரையும் நம்பலாகும். நடக்கும்போதே குலுக்கியும், முகத்தை மஞ்சள்முதலியவற்றால் மினுக்கியும், பற்களைத்தெரிய நகைத்தும் திரிகின்ற மாதர்களை நம்பக்கூடாது. உண்மை ! உண்மை !! உண்மை !!! எ - று. (உஉ)

## கலிநிலைத்துறை.

வண்டுகளிருந்திடின் மதுவையுண்டிடுந்
தண்டமிழிருந்திடிற் சங்கஞ்சேர்ந்திடுங்
குண்டுணியிருந்திடிற் கோள்கள்மிஞ்சிடும்
பெண்டுகளிருந்திடிற் பெரியசண்டையாம்.

(இ-ள்.) வண்டுகளிருந்தால் தேனையுண்ணும், அழகியதமி ழிருந்தால் அநேகக்கூட்டத்தினர் உறவுண்டாம், குண்டுணிக ளிருந்தால் கோள்களே மிகுதியுண்டாம். பெண்கள் பலர்கூடி யிருந்தால் பெரியசண்டை சச்சரவுகளுண்டாம். எ - று. ()

## அறுசீரடி யாசிரிய விருத்தம்.

கற்புடை மாதர்கொங்கை கவரிமான் மயிரின் கற் றை, வெற்புறு வேங்கைதோல் வீரன்கை வெய்ய கூர்வேல், அற்பர்தம பொருள்கடாமு மவரவரிறந்தபின் னே, பற்பலர் கொள்வாரிதப் பாரினி லுண்மைதானே.

(இ-ள்.) கற்புள்ள பெண்களின்முலை, கவரிமான் மயிர்மு டி, மலையிலுள்ள வேங்கையின்தோல், சுத்தவீரர்களின் கையி லுள்ளவேல, அற்பர்களிடத்திலுள்ள பொருள், இவையாவும, அவரவா உயிர்நீங்கியபினனே பலருங்கைக்கொளவாரகள். இ வை உலகததில் சத்தியமே. எ - று. (கஉ)

வீணா பூண்டாலுநதங்கம் வெறும்பொயயா மேற் பூச்சென்பார், பூணுவார் தராப்பூண்டாலும் பொருந்திய தங்கமென்பார், காணவே பனைக்கீழாப் பாற்குடிக்கினுங் கள்ளேயென்பார், மாணுலகத்தோர் புல்லாவழங்குரை மெய்யென்பாரே,

(இ-ள்.) அற்பர்கள் தங்கததை அணிந்திருந்தாலும். கண் டவர்கள் தங்கமலல; மேற்பூச்சென்பார்கள். பூணத்தக்க செல் வர்கள் தாாபித்தளைமுதலிய நகைகளை யணிந்திருந்தாலும், உய ர்ந்த தங்கமென்பார்கள். பலரும்பார்க்கப் பனைநிழலி லிருந்து பாலைக்குடித்தாலும் களகுடிததானெனபார்கள், பெருமை தங் கிய உலகததோா அறிவீனருரைக்கும மொழிகளையே மெய்யெ ன்பாரகள். எ - று. (கங)

## கலிநிலைத்துறை.

ஓரியேமீனுவந் தூணிமுநலையோ
காரியேகண்பிழை நாட்டிலில்லையோ

பாரியகணவனைப் பழுதுசெய்தாநீ
நீரிலேயிருப்பது நிலைமையல்லவே

(இ-ள்.) கணவனை இகழ்ந்து நீங்கிவந்த ஒரு பெண் நரி
யே? ஓர் மீனையிச்சித்து வாயிலிருந்த உணவை யிழந்தனையே
யாதுகாரணமென்ன, அந்நரி ஒபெண்ணே? ஏதேனும் தவறு
தல உலகத்திலில்லையா! நீயோ பெருமைதங்கிய புருடனையிக
ழ்ந்து நீ இத்தன்மையிலிருப்பது உன்தன்மைக் கழகல்லவே
என்றது. எ - று. (கசு)

## அறுசீரடி யாசிரிய விருத்தம்.

சம்புவே யென்னபுத்தி சலந்தனின் மீனைநம்பி
வம்புறு வடத்தைப்போட்டு வானத்தைப் பார்ப்பதேனோ
அம்புவி மாதேகேளா யரசனை யகலவிட்டு
வம்பனைக் கைபிடித்த வாறுபோ லாயிற்றன்றே.

(இ-ள்.) நரியே என்ன மதியால்ஜலத்திற றுள்ளிய மீனை
நம்பி, நாற்றமுள்ள மாமிசத்துணடையிழந்து ஆகாயத்தை எட்
டிப்பார்க்கின்றனை, யாது காரணமென்றுகேட்ட பெணணைப்
பார்த்து அந்தநரி உலகத்தில் மெச்சத்தக்க பெணணே? தன்
நாயகனாகிய அரசனையகலவிட்டு மற்றொரு புருஷனைக் கைப்
பிடித்தவாறு போலாயிற்றென் றறிவாயாக வென்றது, எ-று.

மூப்பிலாக குமரிவாழ்க்கை முனையிலா வரசன்வீரங்
காப்பிலா விளைந்தபூமி கரையிலா திருந்தவேரி [ஞானம்
கோப்பிலான் கொண்டகோலங் குருவிலான் கொண்ட
ஆப்பிலாச் சகடுபோலே யழியுமென றுரைக்கலாமே.

(இ-ள்.) தன்க்கு மூத்தோரில்லாமற் றனியேவாழும் பா
லியப்பெண்வாழ்வும், கோபமில்லாத அரசன்வீரமும, காத்த
லில்லாமல விளைந்த பூமியும், கரையில்லாதிருந்த ஏரியும், தன்
னிடம் வேண்டியவைகளமைத லில்லாதவன் கொள்ளும்இடம்
பமும், ஆசாரியனில்லாதவன்கொண்ட ஞானமும், ஆகிய இ
வையாவும், அச்சாணியில்லாத வண்டிபோல அழிந்துபோமெ
னறு சொல்லலாம். எ - று. (கசு)

பொன்னின்மணிகிண்கிணி சிலம்பொலிபுலம்ப
மின்னுமணிமேகலைகள் மெலமெனவொலிப்பச
சின்னமலர்கொண்டுசில சேடியர்கள்சூழ
அன்னமெனவல்லவென வாமெனவுரைத்தார்.

(இ-ள்) பொன்மணிகளும், சதங்கைமணிகளும், சிலம்பு களுஞ்சப்திக்கப்பிரகாசிக்கின்ற மணிமேகலைகள் மெதுவாய் ஒலிக்க, அரும்புமலர்களைக்கொண்டு சிலபாங்கியர்கள் சூழ்ந்துவர நடக்கின்றவளை அன்னமோ! அல்லவோ! வென்று கண்டோர் கூறினர் (ஒருபெண் நடையைப்பற்றிக்கூறியது.) (௩௭)

கானலை நீரொளென்றெணணிக் கடுவெளி திரியுமான்போல
வானுறு மிலவுநாத்த மதியிலாக் கிள்ளையேபோல்
தேனினைக கண்டுதுமபி தியங்கிய தன்மையேபோல்
நானுனை யரசென்றெண்ணி நாளையும் போக்கினேனே

(இ-ள்) கானலைத்தண்ணீரென்று நினைத்து வெட்ட வெளியில் ஓடித்திரியும் மான்போலவும், பழுக்குமென்று இலவுவிருக்ஷத்தைக்காத்த அறிவிலலாத கிளியைப்போலவும், கள்ளையுண்டுமயங்கிய வண்டுபோலவும், நானுன்னை ராஜனென்றுகருதி நாளெல்லாம் வீணாகப்போக்கினேன். எ-று. (௩௮)

## தலைவனைப்பிரிந்த தலைவிவருந்தல்

சங்குமுழங்குந் தமிழ்நாடன் றன்னைநினைந்த போதெல்லாம், பொங்குகடலு முறங்காது பொழுதோர் நாளும் விடியாது, திங்களுறங்கும் புள்ளுறங்குந் தென்றலுறங்குஞ் சிலகாலம், எங்குமுறங்கு மிராக்கால மென்கணிரண்டு முறங்காதே.

(இ-ள்) சங்குகள் முழங்காநின்ற எனது தமிழ்நாட்டதிபனை நினைக்கும்போதெல்லாம், அலைகள் வீசாநின்ற சமுத்திரமும் தூங்குவதில்லை பொழுதும விடிகிறதில்லை. சந்திரனும் அன்றில குயில்முதலிய பட்சிகளும், தென்றற்காற்றும சிலகாலந்தூங்கும். பேய்முதலிய சகலபிராணிகளும் தூங்கத்தக்க விராக்காலத்தில யாது காரணமோ என் கண்கள்மட்டும உறங்குவதில்லை. எ-று. (௩௯)

அரவினை யாட்டுவாரு மருங்களி றாட்டுவாரும்
இரவினிற் றனிப்போவாரு மேரிநீர் நீந்துவாரும்
விரைசெறி குழலியான வேசையை விரும்புவாரும்
அரசனைப் பகைத்திட்டாரு மாருயி ரிழப்பார்தாமே.

(இ-ள்.) பாம்பாட்டுகிற வர்களும், அரியயானையைப் பாகாக்களும் இராத்திரியில் தனிவழிசெல்கின்றவர்களும், தடாகஜலத்திலே நீந்துகின்றவர்களும், வாசனைநிறைந்த கூந்தலையுடைய வேசியரை இச்சிக்கின்றவர்களும், அரசர்களைப் பகைத்துக்கொண்டவர்களும், பொருந்திய உயிரை இழப்பார்கள். எ - று. (கூ)

வாழ்வது வந்தபோது மனந்தனின் மகிழ்வேண்டாம்
தாழ்வது வந்தாற் றளர்வரோ தக்கோர்மிக்க
ஊழ்வினை வந்தா லொருவரால் விலக்கப்போமோ
ஏழையா யிருந்தோர்பல்லக் கேறுதல் கண்டிலீரோ.

(இ-ள்.) வாழ்வுவந்தகாலத்தில் மனதில்மகிழ்ச்சியை வைக்கக்கூடாது. தாழ்வுவந்ததென்று வருந்தவுங்கூடாது. இதுயே லானோர்செய்கை. ஊழ்வலியால்வரும் செய்கைகளை யாரால் விலக்கலாம். ஏழையாயிருந்தவர்கள் உடனே சிவிகையிலேறித் திரிக்கச் செல்வவான்களானதை நீங்கள் பார்த்ததில்லையா! எ-று.

## எழுசீரடி யாசிரிய விருத்தம்.

பருப்பதங்கள் போனிறைந்த திடுநவமணிப் பலன்களைக் கொடுத்தாலும், விருப்பமீங்கிய கணவனைத்தழுவுதல் வீணதாம் விளையார்ந்த, குருக்குசந்தனக் குழம்பினையனபொடு குளிர்தர வணிந்தாலும், செருக்குமிகுசிய வற்பாதந் தோழமை செப்பவுமாகாதே

(இ-ள்.) மலைகளைப்போலக் குவியல் குவியலாக ஒன்பது வகை இரத்தினங்களையும், பலனுக்கொடுத்தாலும் விருப்பமில்லாத கணவனைக்கூடுதல் வீணேயாம். வாசனைபொருந்தியமிகுந்த செருக்குடைய அற்பர்கள் சந்தனக்குழம்பை ஆசையோடு குளிர்ச்சிதரப் பூசினாலும், அவர்கள் சிநேகத்தை வாயினால் சொல்லவுங்கூடாது. எ - று (சு௨)

## கலிநிலைத்துறை.

பெருத்திடுசெல்வமாம் பிணிவந்துற்றிடில்
உருதெரியாமலே யொளிமழுங்கிடும
மருந்துளதோவெனில் வாகடத்திலை
தரித்திரமென்னுமோர் மருந்திற்றீருமே.

(இ-ள்.) (ஒருவனுக்கு) பெருத்த செல்வச்செருக்கென்னும், வியாதிவந்து கூடினால், உருவந்தெரியாமலே, கண்ணொளி மழுங்கிவிடும். இதற்கு மருந்துள்ளதோவென்று ஆராயில வயித்தியர் கூறிய வாகடங்களிலில்லை, தரித்திரமென்று சொல்லத்தக்க மருந்தினால் உடனேதீரும். எ - று. (௪௩)

## அறுசீரடி யாசிரிய விருத்தம்.

அத்தியின் மலரும்வெள்ளை யாகலைகொள் காக்கைதானும, பித்தர்தம் மனமுநீரிற பிறந்தமீன் பாதந்தானும், அத்தன்மால் பிரமதேவ னாலளவிடப் பட்டாலுஞ், சித்திரவிழியார் நெஞ்சந் தெளிந்தவ ரில்லைகண்டீர்.

(இ-ள்.) அத்திமரத்தின் பூவையும், வெள்ளைநிறங் கொண்ட காக்கையையும, பயித்தியகாரர மனதையும், ஜலத்திற்பிறந்த மச்சங்களின் பாதத்தையும, சிவன் - விஷ்ணு - பிரமதேவன முதலியவர்களால் அளவிடப்பட்டு ஓர்வேளை கண்டறிந்தாலும், சித்திரத்தையொத்த கண்களையுடைய பெண்களின் நெஞ்சத்தின் கருத்தைக்கண்டு தெளிந்தவர்கள் உலகத்தி லில்லை. எ - று. (௪௪)

சொல்லுவார் வார்த்தைகேட்டுத் தோழமை யிகழ்வார்புல்லர், நல்லவர் விசாரியாமற் செய்வரோ நரிசொற்கேட்டு, வல்லியும் பசுவுங்கூடி மாண்டதோர் கதையைப்போல, புல்லியரொருவராலே போகுமே யாவுநாசம்.

(இ-ள்.) அற்பர்கள் பிறர் சொல்லும் வார்த்தைகளைக்கேட்டுச் சினேகத்தை இகழ்வார். மேலானவர்கள் நன்றாய் விசாரியாமல ஒன்றையும் செய்வரோ ? செய்யார். ஓர் நரியினது

சொல்லைக்கேட்டு ஒருபுலியினிடத்துப்பசுசேர்ந்து இறந்துபோனகதையைப்போல் அறிவீனராலே, யாவும் நாசமாய்ப்போம். இக்கதை பஞ்சதந்திரத்திலுள்ளது. எ - று. (சுரு)

சுதலிவீரர் களத்திடைவையினுங்
குதலைவாயிற் குழவிகள்வையினும்
மதனலீலையின் மங்கையர்வையினும்
இதமுறச்செவிக் கின்பமவிளையுமே.

(இ-ள்.) விருதுகளைப்பெற்ற சுதந்தவீரர்கள் யுத்தகளத்தினிடத்துத் திட்டினாலும், மழலைச்சொற்களையுடைய குழந்தைகள் வைதாலும், மன்மதலீலாவிநோதக் கலவியில் மங்கையர்கள் நிந்தித்தாலும், இனிமையுறச்செவிக்கு இன்பமே உண்டாகும். எ - று. (சுசு)

புத்திமான் பலவானவான் பலமுளான் புத்தியற்றால்
எத்தனை விதத்தினாலு மிடர்படு வந்தே தீரும்
மற்றொரு சிங்கந்தனை வருமுயல் கூட்டிச்சென்றே
உற்றதோர் கிணற்றிற்சாயல் காட்டிய வுவமைபோலே.

(இ-ள்.) ஓர் சிங்கத்தை ஒருமுயல் கூட்டிக்கொண்டுபோய் ஓர் கிணற்றில் அதன் சாயலைக்காட்டிக்கொன்ற உவமைக்கதைபோல, எவ்வளவு வீரத்தன்மையுள்ளவனும், புத்தியில்லாவிடில் எந்தவிதத்திலும், அவனுக்குத் துன்பமேவந்து சேரும். ஆதலால் புத்தியுள்ளவனே பலவான். இதிற்குறித்த கதை பஞ்சதந்திரத்திலுள்ளது. எ - று. (சுஎ)

மானமுள்ளோர் கடனன்றோ் மயிரற்றினுயிர் வாழாத. கானுறுகவரிமான் போறகனம பெறுபுகழே பூணபார், மானமொன் றில்லாதாமு மழுங்கலாய்ச் சலங்கலாகி, ஈனமாங்கழுதைக் கொப்பா யிருப்பரென றுரைக்கலாமே.

(இ-ள்) தன்னிடத்துள்ள ஓர் மயிர் அறுந்தாலும் உயிரை விடுகின்ற கவரிமானைப்போல்மானமுள்ளவர்கள்எப்பொழுதும்

புகழையே விரும்புவார்கள். மானமில்லாதவர் புத்திமழுங்கிச் செங்கலாதி யீனமடைந்த கழுதைக்கொப்பாய் இருப்பர்.

## கலிவிருத்தம்.

கழுதைகாவெனக் கண்டுநின் றாடியவலகை
தொழுதுமீண்டுமக் கழுதையைத்துதிசெய்வதுதான்
பழுதிலாநாமகக்கார் நிகராமெனப்பகரு
முழுதுமூடனைமூடர் கொண்டாடியமுறைபோல

(இ-ள்.) அறிவில்லாதமூடர்களை, அவரினுந்தாழ்ந்த மூடமூடர்கள் கொண்டாடிப்புகழ்வது எவ்வாறெனில், ஒருகழுதை காவென்றுகத்தி யழைப்பாரதை, அதற்கிசைய நின்றாடிய ஒருபிசாசுதிரும்பவும் அந்தக் காந்தபத்தை வணங்கித் துதிசெய்ய வது குற்றமில்லாதகுலமுடைய நமக்கு ஒப்பானவர்களே யென்று சொல்வதுபோலிருக்கும். எ - று. (சஅ)

## அறுசீரடி யாசிரிய விருத்தம்

ஆசாரஞ் செய்வாராகி லறிவொடு புகழுமுண்டாம்
ஆசார நன்மையாலே யவனியிற் றேவராவர்
ஆசாரஞ் செய்யாராகி லறிவொடு புகழுமற்றுப்
பேசாதபோற் பேச்சுமாகிப் பிணியொடு நரகில்வீழ்வார்.

(இ-ள்.) ஒழுக்கந்தவறாது செய்வாராகில் (அவர்க்கு) நல் லறிவோடு புகழுமுண்டாம், அவ்வொழுக்கமே நன்மையாய வதிகரிக்குமாகில் அவரே உலகத்தில் தெய்வமாவர், ஒழுக்கந் தவறுவாராகில அறிவோடு கல்விகீர்த்தியுமற்று, ஊமையா போல பேசுவாராகி, இம்மையிற்பிணியாலுழன்று மறுமையில் நரகத்தையடைவார்கள். எ - று. (௪௯)

செல்வமவந் துற்றபோது தெய்வமுஞ் சிறிதுபே ணார், சொல்வதை யறிந்துசொல்லார் சுற்றமுந் துணை யும்பேணார், வெல்வதே கருமமல்லால் வெப்பதை வலி தென்றெண்ணார், வல்வினை விளைவும்பாரார் மண்ணின் மேல் வாழுமாந்தர்.

(இ-ள்.) உலகத்தில்வாழும் மானிடர்க்குச் செல்வமான து மிகுதியாய்வந்து சேர்ந்தபொழுது கொஞ்சமேனுந் தெய் வத்தையுங் கருதார். சொல்லுகின்றதைக் கேட்டுப் பதிலுஞ் சொல்லார், பந்துமித்திரர்களையுங் கவனியார். எக்காரியத்திலு ம், ஜெயத்தையே கருமமாகக் கருதுவாரேயல்லாமல், வெவ் விய பகைவனுடைய வலிமையை யெண்ணார்கள். வலியபாவ வினைவையும் பாரார்கள். எ - று. (ருக)

யானையைச்சலந்தனி லிழுத்தவக்கரா
பூனையைக்கரைதனிற் பிடிக்கப்போகுமோ
தானையுந்தலைவருந் தலம்விட்டேகினால
சேனையுஞ்செல்வமுந் தியங்குவார்களே.

(இ-ள்.) ஜலத்திலிருந்து ஓர்பெரிய மதயானையைக்கடித் திழுந்த முதலையானது கரையிலுள்ள ஒருபூனையைப் பிடிக்கக் கரையிற்செல்லமாட்டாது. அதுபோல அரசர்களும், சதுரங்க சேனைகளுடன் தங்களிருப்பிடம்விட்டுச் சென்றால், செல்வமி குந்த சேனையுடன் தியங்குவார்கள். எ - று. (ருஉ)

கொண்டநற் கலைகளோடுங் குணமிலாத கோதை மாரை, கண்டுவின் விருப்பங்கொண்டால் கனவிலும் புல்ல வொண்ணு, துணைவுடன் மதுவையுண்ண வேரியம்பூ வில வீழ்ந்த, வண்டினம் பட்டபாடு மனிதரும் படுவர் தாமே.

(இ-ள்.) கல்விசாத்திரப்பயிற்சியும், நற்குணமுமில்லாத மங் கையர்களைக் கண்ணால் நிதானித்துப்பார்த்து அவர்களை விலக் கவேண்டுமேயல்லாமல், கனவிலாயினுஞ் சேரவொண்ணாது, சேருவரேல் எழுதிய சித்திரமாகிய தாமரையில் தேனுண்டெ ன்று வீழ்ந்துவருந்திய வண்டுகூட்டங்கள் பட்டபாடு அவர்க ளும் அடைவார்கள். எ - று. (ருங)

மயிற்குயில் செங்காலன்னம் வண்டுகண்ணாடி பன் றி, அயிலெயிற் றரவுதிங்க ளாதவனாழி கொக்கோ,

டுயருங்கமலம் பன்மூன் றுறுகுண மூடையோர் தம்மை, இயலுறு புவியோர்போற்று மீசனென் றெண்ணலாமே.

(இ-ள்.) மயில், குயில், சிவந்தகால்களையுடைய அன்னம், வண்டு, கனைத்தடி, பன்றி, கூர்மைபொருந்திய பற்களையுடைய பாம்பு, சந்திரன், சூரியன், சமுத்திரம், கொக்கு, உயர்ந்தஆகாயம், தாமரை, இந்தப்பதின்மூன்று பொருள்களினிடத்துமுள்ள குணங்களை வகித்தவர்களை, உலகத்தவரெல்லாம் போற்றும் ஈசனென்று சொல்லலாம். எ - று. இவைகளின் குணங்களை விரிக்கிற பெருகும், ஆசிரியர்களிடத்துக் கேட்டுணர்க. ()

தெருளிலாக்கலையினோர் செருக்குமாண்மையும்
பொருளிலாவறிஞரைம் பொறியடக்கமும்
அருளிலாவறிஞர்த மௌனநாசமும்
கருவிலாமங்கையர் கற்புமொக்குமால

(இ-ள்) தெளிவில்லாத கல்வியாளர்களுடைய அகங்காரமும், மனோ வடக்கமும், பொருளில்லாத தரித்திரர்களுடைய, மெய், வாய், கண், மூக்கு, செவியென்றஐம்பொறிகளினடக்கமும், அருளில்லாத ஞானிகளின் மவுனநாசமும், மகப்பேறில்லாத மங்கையர்கள் கற்பும், ஆகிய இவைகள் ஒன்றுக்கொன்று சமமாகும். எ - று. (௩௫)

மாதுலைமபதி னாயிரம்யோசனை மயிலகண்டு நடமாடும், சதுரபானூறா றாயிரம்யோசனை தாமரைமுகமலரும், திங்களை கைற கிரட்டியோசனையுறச் சிறந்திடு மாக்காம்பல், எங்களையினு மன்பராயிருப்பவ ரிதயம்விட்டகலாரே.

(இ-ள்) ஐம்பதினாயிரம் யோசனை தூரத்திலுள்ள மேகத்தைக்கண்டு, மயில்நடனம்பண்ணும். நூறாயிரம்யோசனை தூரத்திலுள்ள சூரியனைக்கண்டு தாமரை முகமலர்ச்சியைக்காட்டும் இருநூறாயிரம் யோசனை தூரத்திலுள்ள சந்திரனைக் கண்டு

செவ்வல்லிமலர்ந்து சிறப்பையடையும். எவ்வளவுதூரத்திலிருப்பாராயினுமன்பராயிருப்பவர், இருதயத்தைவிட்டு அகலார்கள். எ - று. (ருசு)

சந்திரனில்லாவானந் தாமரையில்லாப்பொய்கை
மந்திரியில்லாவேந்தன் மதகரியில்லாச்சேனை
சுந்தரப்புலவரில்லாத் தொல்சபைசுதரில்லாவாழ்வு
தந்திகளில்லாவீணை தனமில்லாமங்கைபோலாம.

(இ-ள) சந்திரனில்லாத ஆகாயம, தாமரையில்லாத தடாகம, மந்திரியில்லாத அரசன், மலைபோலும மதயானையில்லாத சேனைகள், அழகிய வித்வான்களில்லாதசபை, மக்களில்லாதவாழ்க்கை, தந்தி நரம்பில்லாதவீணை, யிவையாவும, இரண்டு ஸ்தனங்களுமில்லாத மங்கையா சுகமபோல வீணுகும ()

நுரைகடலமுதமையுங் குறத்தியுண்மையும்
நரையறமாநுனை நயுண்டிளமைநணைலும
விரைசெறிகுழலினுள் வேசையாசையும்
அரையரன்பமைவது மைந்துமிலலையே.

(இ-ள்) சபதிக்கின்ற சமுத்திரத்திற்குச் சலதரித்திரமும், (இருடுந்தொழிற்கற்ற) குறத்திகளின சத்தியமும, நரைதிரைத்தளருமபடி அவிழ்தமுண்டு பாலபருவமடைதலும், வாசனை செறிந்த கூந்தலையுடைய வேசியாகளுக்கு ஒருவர் மேலுணமையான ஆசையுண்டாதலும், அரசர்கள் ஒருவரிடத்திலநீங்காத அன்புடையவராயிருத்தலும், ஆகிய இவை ஐந்துமடைவதற்கரிது. எ - று. (ருஎ)

மூடனை மூர்க்கன்கொன்றால மூர்க்கனை முனிவான்கொலலும, மடவனை வலியான்கொன்றால் மறவிதாவனைக்கொல்லுங், கடவனை மூலமாகேசவிநந்தரணியிலுள்ளோர்க்கெல்லா, மடவனை யடித்தகோலும் வலியனை யடிக்குங்கண்டாய்.

(இ-ள்.) மூடனை அகங்காரகுணமுள்ள மூர்க்கன் கொன்றால், அம்மூர்க்கனை அவனிலும அதிக கோபமுடைய

ஒருவன் சொல்லுவான். அறிவில்லாத ஏழையைகல்வியுள்ளவன் சொல்வானாகில், அவனை இயமன்சொல்வான். விசாலித்த, மலைபோலு முலையையுடையவளே, ஏழையை அடித்தகோலே பலவானையும், அடிக்கும் என்றறிவாயாக. எ - று. (ருக)

பொருளிலார்க் கின்பமில்லை புண்ணிய மில்லையென்று
மருவிய கீர்த்தியில்லை மைந்தரிற் பெருமையில்லை
கருதிய கருமமில்லை கதிபெறு வழியுமில்லை
பெருநிலந் தனிற்சஞ்சாரப் பிரேதமாய்த் திரிகுவாரே.

(இ-ள்) பொருளில்லாதவருக்கு, இன்பம், புண்ணியம், பொருந்திய கீர்த்தி, மக்களாற்பெருமை, நினைத்தபடி முடிக்கும் வல்லமை, மோட்சமடையும் வழி, இவைகள் கிடையா. அவர்பெருத்த உலகத்திலநடக்குந்தன்மையுள்ள பிணமென்று சொல்லும்படித் திரிவார்கள். எ - று. (ருஉ)

தூம்பினிற புதைத்தகல்லுந் துகளன்றிச் சுடர்கொடாது, பாம்புக்குப் பால்வார்த்தென்றும் பழகினு நன்மைதாரா, வேம்புக்குத் தேன்வார்த்தாலும் வேப்பிலைக் கசப்புமாறா, தாம்பலநூல் கற்றாலுந் துற்சனர் தக்கோராகார.

(இ-ள்.) வழியில் பலபேர்மிதிக்கும்படி, புதைத்தகல்லாயிருந்தாலுந் தேய்ந்து ஒளிகமின்றிப பிரகாசத்தைக் கொடாது. பாம்புக்குபபாலைவார்த்துத் தினந்தோறும், அதனுடன் பழகிவந்தாலும், நன்மையைத்தராது வேம்புக்குத்தேனைவார்த்து வளர்த்தாலும், அதின் கசப்புமாறாது. துற்சனர்கள் பலநூலைக்கற்றாலும் நல்லோராகார் எ - று. (ருங)

கல்லாத மாந்தரையுங் கடுங்கோபத் துரைகளையுங் காலந்தேர்ந்து, சொல்லாதவமைச்சரையுந் துயர்க்குதவாத் தேவரையுங் கருதினால், வல்லரவந்தனைத் தமையுங்கொண்டவனே டெந்நாளும் வலதுபேசி, நல்லார்போலருகிருக்கு மனைவியையு மொருநாளு நம்பொணாதே.

(இ-ள்) கல்வியில்லாத மனிதர்களையும், மிகுந்தகோபமுள்ள அரசர்களையும், வருங்காலமறிந்து சொல்லாத மந்திரிகளையும், துன்பம்வந்தவிடத்து உதவிசெய்யாத தெய்வங்களையும், வேதநூலில்வல்லவரலலாத பிராமணர்களையும், கணவனோடெந்நாளிலும் வல்லமைபேசி நல்லவாகளைபபோல அருகிலிருக்கும மனைவியையும், ஒரு நாளும் நமபக்கூடாது. எ-று.

தேளது தீயில்வீழ்ந்தாற் செத்திடா தெடுத்தபேரை
மீளவே கொடுக்கினாலே மெய்யுறக் கொட்டல்போல
ஏளனம் பேசித்தீங்குற் றிருப்பதை யெதிர்கண்டாலுங்
கோளினர் தமக்குநன்மை செய்வது குற்றமாமே.

(இ-ள்.) தேளானது நெருப்பிலவிழுந்தால் இறந்துபோமென்று கருதி எடுத்தவரைக் கொடுக்கினாலே துன்பமுறும்படி கொட்டுதல்போல, கேலிகள்பேசி பலவிதத் தீங்குகளைக் கொண்டு இருப்பதை நேராகப்பார்த்தும், உலகத்தில கோளுடையவர்க்கு நன்மைசெய்தால குற்றமே உண்டாகும். ()

அறிவுளோர் தமக்குநாளு மரசருந் தொழுதுவாழ்
வார், நிறையொடு புவியினுள்ளோர் நேசமாய் வணக்கஞ்
செய்வார், அறிவுளோர் தமக்கும்யாதோ ரசடது வரு
மேயாகில், வெறியவொன் றிகழாரென்று மேதினியுள்
ளோர்தாமே.

(இ-ள்.) அறிவுடையவர்களுக்கு அரசரும் வணங்கிவாழ்வார்கள். உலகத்தவர்களும் உண்மையான நேசத்தோடு பணிதல்செய்வார்கள். அவர்க்குயாதேனும் ஓர் குற்றம்நேரிட்டாலும், வெறுக்கத்தக்கவொன்று இகழ்ச்சிசெய்யார். இவ்வுலகினர் செய்கை இத்தன்மையதாம். எ-று. (கூச)

குருவுப தேசமாதர் கூடியவின்பந் தன்பால்
மருவிய நியாயங்கல்வி வயதுதான் செய்ததன்மம்
அரியமந் திரம்விசார மாண்மையின் நிலைகளெல்லாம்
ஒருவருந்தெரியவொண் ணு துரைத்திடி லழிந்துபோமே.

(இ-ள்.) ஆசிரியர்செய்த உபதேசம், ஸ்திரியினிடத் தனுபவித்த இன்பம், தன்னிடத்துப்பொருந்திய நியாயம், கல்வி, ஆயுள், தனக்குச்செய்ததருமம், அரிதாகிய மந்திரம், தனம், வல்லமை, இவைகளெல்லாம், ஒருவருக்குந் தெரியக்கூடாது. வெளிவிடில் அழிந்துபோம். எ - று. (௬௫)

இந்நிலை வறுமையாகி யேற்றவர்க்கிசைந்த செல்வம், கொடுப்பதே மிகவுநன்று குற்றமேயின்றி வாழ்வார், தந்ததை விலக்கினோர்க்குத் தக்கநோய் பிணிகளாகி, உடுக்கவே யுடையின்றி யுணசோறும் வெல்லமாமே.

(இ-ள்.) தனமடைந்த தரித்திரத்தால் யாசிப்பவர்க்கு மனமகிழப்பொருள்களை (கொடுக்கின்றவரைத்) தடுத்து விலக்குகின்றவர்களுக்குத் தகுதியான தனபங்கரத்தக்க பிணியுண்டாகி உடுக்கத் துணியுமின்றி சாப்பிடுதற்குரிய அன்னமும் கிடையாமல் வெல்லம்போலருமையாகும். எ - று. (௬௬)

மெய்யதைச் சொல்வாராகில் விளங்கிடு மேலுநன்மை
வையக மதனைக்கொள்வார் மனிதரிற் றேவராவார்
பொய்யதைச் சொல்வாராகிற் போசன மற்பமாகும்
நொய்யரிசி யர்களென்று நோக்கிடா ரறிவுளோரே.

(இ-ள்) மெய்சொல்வோரிடத்து நன்மையே விளங்கும். உலகத்தவரும் அவருடைய வார்த்தைகளை ஒப்புக்கொள்வார்கள். மானிடரில் அவரேதெய்வமாவார். பொய்பேசுபவரிடத்து உணவும் அற்பமாம். நொய்யரிசி கொதிதாளாதென்னும் பழமொழிபோலப் பெருந்தன்மை யுடையவர்களல்லவென்று மதித்து அறிவுடையோர்களும், அவரைப்பாரார்கள். எ - று. ()

தந்தையுரைதட்டினவன் றாயுரையிகழ்ந்தோன்
அந்தமுறுதேசிகர்த மாணையைமறந்தோன்
சந்தமுறுவேதநெறி தாண்டினவன்னால்வர்
செந்தழலின்வாயினிடை சேர்வதுமெய்கண்டீர்.

(இ-ள்.) தகப்பன்சொல்லைத் தள்ளிநடந்தவன், தாய்வார்த்தையையிகழ்ச்சிசெய்தவன், அழகிய குருவினுபகாரத்தையை மறந்தவன், சந்தமுள்ள வேதநெறிகளைக்கடந்தவனுகிய இந்நால்வரும், சிவந்த அக்கினிவாயின கனலையடைவது உண்மையென்றறியக்கடவீராக. எ - று. (௬௮)

நாரிகள் வழக்கதாயி னடுவறிந் துரைத்தாசுத்தர்
ஏரிபோற் பெருகிமண்மே லிருகணும விளங்கிவாழ்வார்
ஓரமே சொல்வாராகி லோங்கிய கிளையுமாண்டு
நீரவே கண்களிரண்டு நெரியாமல மாழ்குவாரே.

(இ-ள்.) ஏழைப்பெண்கள் முறையிட்ட வழக்குகளாயிருக்கினும நடுநிலைமையறிந்து நியாயமசொல்பவரே பரிசுத்தா. அவாகள் பெரியதடாகமபோல பெருகிபூமியின்மேல இரண்டு கணணும பிரகாசிந்துவாழவாாகள். பட்சபாதமாயச சொலலுவரேல அவர்கள் சுற்றமுமிழந்து இருவிழிகளுநதெரியாத குருடராய மயங்கிவருநதுவார்கள். எ - று. (௬௯)

## முலைநலங்கூறல்.

துப்புறச் சிவந்தவாயா ளேபஞ்சணையின் மீதில்
ஒப்புறக் கணவனோடே யோரலீலை செய்யுமபோது
கற்பகஞ் சோரகமார்பிற் கனதனமிரண்டு தைததே
அப்புறமுருவிற்றென்றே யங்கையாற்றடவிப்பாாத்தாள்.

(இ-ள்.) பவளம்போன்ற சிவந்த வாயையுடையவள், பரிசுத்தமான பஞ்சணையின்பேரில தன்கணவனோடு ஒபபறற ஒரு லைககலவி செய்யுங்காலத்தில, பரதாரகமனமென்பதை சற்றும நினையாத தன்னாயகனது மார்பில்பருதத தனமுலைகளிரண்டுந்தைத்துப் பின்புறம் ஊடுருவிபபோய்விட்டதெனறு தன்னழகிய கைகளால் தடவிப்பாாத்தாள். எ - று. (௭0)

ஏரிநீர்நிறைந்தபோதங் கிருந்தனபட்சியெல்லா
மாரிநீர்மறுததபோது வந்ததிலிருப்பதுண்டோ

பாரினையாளும்வேந்தன் பட்சமுமறந்தபோதே
யாருமேநிலையில்லாம லவரவரேகுவாரே.

(இ-ள்.) தடாகத்தில் ஜலமிருக்கும்போது பக்ஷிகளெல்லாம் வந்து கூடியிருந்தன. அந்நீர்வற்றியபோது பக்ஷிகள் அங்கு இருப்பதுண்டோ? அதுபோல உலகத்தையாளும அரசன் பக்ஷத்தை மறந்தபோது ஒருவரும் நிலையிலலாமல் அவரவர்கள பக்ஷமுள்ள விடந்தேடிச செல்வார்கள். எ - று. (௭௧)

## சந்தக்கழிநெடில் விருத்தம்

மண்ணாசட்டி கரநதேந்தி மறநாய்கெளவுங் காலி
னராய், அண்ணாந்தேங்கி யிருப்பாரை யறிந்தோமறிந்
தோ மம்மம்மா, பண்ணார்மொழியார் பாலடிசில்லைப்
பொற கலத்திற்பரிந்தூட்ட, உண்ணாநின்ற போதொரு
வர்க குதவாமாந்த ரிவர்தாமே.

(இ-ள) கையில மண்சட்டியேந்தி மறநாயகெளவும், லட்சணமுடைய காலுள்ளவராய் எங்கு அன்னங் கிடைக்குமோ வென்று ஏங்கி யண்ணாந்திருக்கின்றவர்களை அம்மமமா? கண்டோம்! கண்டோம்!! அவாயாரெனில் இராகம்போன்ற வார்த்தையை யுடைய மங்கையர்கள் பொன்கலத்திற் பாலொடு கலந்த அன்னத்தைமிக அன்போடு ஊட்ட உண்ணுஞ்சமையத்தில் ஒருவருக்கும் கொடாத உலுத்தர்களே. எ - று. (௭௨)

மண்டலத் தோர்கள்செய்த பாவமன்னவரைச் சே
ருந், திண்டிறன் மன்னர்செய்த தீங்குமந்திரியைச் சே
ருக், தொண்டர்கள் செய்ததோஷந்தொடர்ந்துதங் குரு
வைச்சேருங், கண்டன மொழியாள்செய்த கன்மமுங்
கணவர்க்காமே.

(இ-ள்.) உலகத்தவர்கள் செய்தபாவம், அரசர்களைச் சாரும், வலிமையுள்ள அரசர்கள் செய்ததீமை, அமைச்சரைச்சே

றும், அடியார்கள்செய்த குற்றம் தன் ஆசிரியனைப்பற்றும், நற்
கண்டுபோலும், மொழியையுடைய மனைவியாகள் செய்தபாவ
ம புருடர்களுக்காகும. எ - று. (௭௫)

நற்குண முடையவேந்தை நயந்துசேவித்தலொ
ன்று,பொற்புடைமகளிரோடு பொருந்தியே வாழ்தலொ
ன்று, பற்பலரோடுநன்னூல பகர்ந்துவாசித்தலொன்று,
சொற்பெறு மிவைகண்மூன்று மிம்மையிற் சுவர்க்கந்தா
னே.

(இ-ள்.) நல்லகுணமுடைய ராஜர்களை விரும்பி தரிசித்த
லும், அழகுடைய ஸ்ரீகளோடுகூடிவாழ்தலும், கலவிமான்களா
ன நல்லாசிரியனையடுத்துத தன்னையொத்த மாணுக்கர் பலரோ
டும. நலலநூலகளைககேட்டுச் சந்தேகமறப்பயின்று கற்றுக்கொ
ளளுதலுமாகிய இந்த மூன்றுகாரியஙகளும, இகத்தில அனுப
விககததக்க சுவர்ககபோகங்களாம. எ - று. (௭௬)

நிட்டையிலே யிருந்துமனந் துறவடைந்த பெரி
யோர்க ளிமலன்றாளைக், கிட்டையிலே தொடுத்துமுத
தி பெறுமளவும் பெரியசுகங் கிடைக்குங்காம, வெட்
டையிலே மதிமயங்கிச் சிறுவருக்கு மணம்பேசி விரும்
பித்தாலி, கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே
கிடத்துமட்டுங் கவலைதானே.

(இ-ள்.) சதாநிட்டைபுரிந்து பற்றுநீங்கி, மனஇன்கண்து
றவடைநத பெரியோர்களெல்லாம் பரமபதியின் பததனைத்து
திககக கிடைத்ததுமுதல், மோட்சததை அடையுமவரையில,
பெரிதான ஆனந்ததனை அடைவாாகள். கன்னியர்கள காம
மெனனும், வெபபதுதிலே புததிமயங்கிக் கிடப்பவர்களெல்லா
ம் சிறுமியாக்கு விவாகமுறைபேசி விருப்பத்தோடு தாலிகட்டு
வது முதல சுடுகாட்டிலடுக்கிய கட்டைகளின் நடுமததியில்
கொண்டுபோய் வைக்கும், வரையில, துன்பமே யனுபவிப்பா
ர்கள். எ - று. (௭௭)

## தலைவன்வருந்தல்.

அன்னம் பழித்த நடையாமைபழித்த விழியமுதம் பழித்தமொழிகள். பொன்னைப் பெருத்தமுலை கன்னங் கறுத்தகுழல் புன்னைசிறுத்த விடைபெண், ணென்னெஞ் சுருக்கவவ ளென்னெஞ்சு நற்றகலை யெனவென்றுரைப் பதினிநான், சின்னஞ் சிறுக்கியவள் விலங்கமிட்டபடி தெய்வங்களுங் கபயமே.

(இ-ள்.) அன்னத்தை இகழ்ந்த நடையையும், விஷத்தை நிந்தித்த கண்களையும், அமிர்தத்தைப் பழித்த சொற்களையும், பொன்போலும் தேமற்படர்ந்த பருத்தமுலைகளையும், கருநிறமாக இருண்ட கூந்தலினையும், கண்டவர்கள் அதிநுட்பமென்று மதிக்கும்படி மிகவுஞ்சிறுத்த இடையினையுமுடைய பெண்ணானவள், எனதுமனதை உருக்க அவள் தனநெஞ்சிற் கற்றுக்கொண்ட சாதுரியவல்லபத்தை இனி நானென்னென்று சொல்லுவேன், அச்சிறுக்கியால் நேரிட்டவிலங்கங்களுக்குத் தெய்வத்தை நோக்கி முறையிடுவதன்றி யென்னாலசெய்யத் தக்கதியாது. எ - று. (௭௬)

## எழுசீரடி யாசிரிய விருத்தம்.

ஆவீனமழைபொழிய இல்லம்வீழ அகத்தடியாள் மெய்நோவ அடிமைசாவ, மாவீரம்போகுதென விதைகொண்டோட வழியிலே கடன்காரர் மறித்துக்கொள்ளக், கோவேந்தருழுதுண்ட கடமைகேட்கக் குருக்கள்வந்து தட்சணைக்குக் குறுக்கேநிற்கப், பாவாணர் கவிபாடிப் பரிசுகேட்கப் பாவிமகன் படுந்துயரம் பார்க்கொணாதே.

(இ-ள்.) பசுகன்றைப்பெற மழைவிடாதுபெய்ய, வீடு இடிந்து விழ, வீட்டுக்குரியமனைவி கொப்பவேதனைப்பட வேலையாள் இறக்க, ஈரங்காய்ந்துவிடுகின்றதென்று விதைக்க விதை

கொண்டு ஓட, அந்தவழியிலே கடன்காரர் மறித்துக்கொள்ள, அச்சமயத்தில், வேளாண்மைசெய்து சாப்பிட்டபூமிகளின் தீர்வையை, தலைமையான அரசர்கேட்க, அதுகாலை குருக்களானவரும் குருதக்ஷிணை தட்சணைகேட்க, கவிகளைப்பாடி வித்துவான்கள் சன்மானஞ்செய்யும்படி வினவ, பாவிமகன் அடையுமதுன்பம் பாராக்கசகிக்காது. எ - று. (௭௭)

## அறுசீரடி யாசிரிய விருத்தம்.

தாயபகை பிறர்நட்பாகில் தந்தையும் ருணவாளனாகில், வாயபகை மனைவியாரு மாவழகுற்றபோது, பேயபகை பிள்ளைதானும் பெருமைநூல் கல்லாவிட்டால், சேயபகை யொருவர்க்கு மென்றனர் தெளிந்த நூலோர்

(இ-ள்.) பிறருக்கு அனுகூலமாகவும் தனக்குப் பகையாகவுமிருக்கின்ற மாதாவும், அதிகங்கடன்பட்ட பிதாவும், மிகுந்த அழகுள்ளவளாயுள்ள (தனக்குவந்த) மனைவியும், பெருமையான சாஸ்திரங்களைக் கற்றுக்கொள்ளாத பிள்ளையும், ஒருவனுக்குக் கிடைக்குமாகில், அவன் யாவருக்கும் பகையுடையவனென்றே நன்றாய் அறிந்த கிரந்தகர்த்தாக்கள் சொல்வார்கள். எ - று. ()

நிலைதனா நிட்டபோது நீணிலத்துறவுமில்லை
சலமிருந்தகன்றபோது தாமரைக்கருக்கன்கூற்றம்
பலமொடுமெரியும்போது பற்றுதீக்குறவாங்காற்று
மெலிவதுவிளக்கேயாகில் மீண்டுமக்காற்றேகூற்றாய்

(இ-ள்.) நீர் நிறைந்த தடாகத்திலுள்ள தாமரைப் புஷ்பம் தழைத்த அக்காலத்தில் சினேகனாயிருந்த சூரியனே, நீர்வற்றியகாலத்தில் அத்தாமரைக்குச் சத்துருவாய் நாசஞ்செய்வான். அடர்ந்த பெருங்காடுகள் தீப்பற்றியெரியும்போது அப்பெருநெருப்புக்கு வாயுவாகிய காற்றுதவியாக நிற்கும். அவ்விதநெருப்பு தன்னளவிற் சுருங்கி யொருதீபத்தளவாய் நின்றபோது அக்காற்றே அத்தீபத்திற்கு யமனாகும். அதுபோல, செல்வம் நிறைந்தகாலத்தில நெருங்கிய உறவினராயிருந்தவர்களும், அது தவறியகாலத்தில். பந்துத்துவநீங்கிய பகைவராவார்கள்.

மடுத்தபா வாணர்தக்கோர் மறையவரிரப்போர்க்
கெல்லாம், கொடுத்துயார் வறுமையுற்றார் கொடாதுவா
ழ்ந்தவரார்மண்மேல், எடுத்துநாடுண்ட நீருமெடாதகா
டடகத்து நீரு, மடுத்தகோடையிலே வற்றியல்ல திற்
பெருகுந் தானே.

(இ-ள்.) சேருங்கிய வித்வான்கள், மேலானவாகள், வே
தியர்கள், யாசிப்போர்கள், இவர்களுக்குக் கொடுத்திருலை யா
ர தரித்திரத்தை யடைந்தாாகள். கொடாமல பூமிமேலிருநது
யார் வாழ்ந்தார்கள் நாட்டில யாவரும் எடுத்துணணத்தக்கத
டாகஜலமும, ஒருவரும் எடுத்துணணாத காட்டினிடத்துள்ள
ஈரிநீரும, பொருந்திய கோடைகாலத்தில வறறியும (காா கா
லத்தில) ஜலம் நிறைநதுமபெருகுமலலவா. எ - று. (அ0)

உணங்கியொருகால் முடமாகி யொருகணிழந்து
செவியிழந்து, வணங்கு நெடுவாலறுபபுண்டு மனனுமுது
கில வயிறொட்டி, அணங்குநகவிய மூபபெயதி யகலவா
யோடு கழுததேநதிச், சுணங்கன முடிவலபின்செனறால
யாரைக்காமன றயாசெயயானே.

(இ-ள்) வாட்டமுறறும் ஒருகால முடமாகியும், ஒருகணை
குருடடைந்தும், காதறுபபுண்டும, நீணடுகளேயும வாலஅறுபட்
டும, உணவினறி வயிறுமுதுகோடொட்டியும, அழகுகெட்டு
முதுமை வாயந்தும அகன்றவாயிளையுடைய கலவடையைக்
கழுத்திலமாட்டிக்கொணடும், திரியும ஆணநாயானது; ஒரு
பெணணுயினபின காமததாலோடித்திரியுமாகில், மறறையவ
ரகளே மனமதனதுன்பஞ்செயயானே. எ - று. (அக)

கன்மனைப பாாபபார் நங்களைப்படைத்துக் காகந
னை நியன்செயபபடைத்தாய், துன்மதிவணிகர் தமகளை
ப்படைத்தச் சோரனையெனசெயப்படைத்தாய், வணம
னவடிகா தஙகளைப்படைத்து வானரமென்செயப் படை
த்தாய், நன்மனைதோறும பெணகளைப்படைத்து நமனை
யென்செயப் படைத்தனையே.

(இ-ள்.) (ஒ நான்முகனே?) கருங்கல்லைப்போன்ற நெஞ்சத்தையுடைய பிராமணரைப்படைத்திருந்தும் காகத்தையும், துற்புத்தியுள்ள வணிகரைப் படைத்திருந்தும் திருடர்களையும், வலிய நெஞ்சத்தையுடைய வடுகரைப்படைத்திருந்தும் எமனையும், மாறுசயாதுகாரணத்துக்காக படைப்பித்தாய். எ - று. ()

உண்ணல்பூச்சூடனெஞ் சுவந்தகலொப்பனை
பண்ணலெல்லாமவர் பார்க்கவேயன்றோ
யண்ணல்தன்பிரிவினை யறிந்துநந்தோழிநீ
மண்ணுவநதனையிது மடமையாகுமால்.

(இ-ள்.) எனதுயிர்ப்பாங்கியே ? உலகத்தில் கற்பிற்சிறந்த பெண்கள், மதுரமான ஆகாரங்களை யுட்கொள்ளுதலும், பரிமளமிகுந்த புட்பங்களைமுடித்தலும், மனமகிழ்ச்சி முகமலரசிகளோடிருத்தலும், மற்றும் பலவிதமான திவ்யவஸ்திராபரணங்களால் தன்னை யலங்கரித்துக் கொள்ளுதலுமாகிய இவைகளெல்லாம், தந்தங்கணவர்களைகண்டு களிப்பதற்காகவே யல்லவோ ? (அவ்வாறிருக்க) பெருமையிற்சிறந்த வெனது நாயகன் தற்சமயம் எனைவிட்டுப் பிரிந்திருப்பதனைக்குறித் தெரிந்திருந்தும், என்னை யலங்காரஞ்செய்வதற்காக, நீவந்தது உனதறியாமையினாலல்லவோ ? எ - று. (௩௯)

கோளரி யடர்ந்தகாட்டிற் குறங்கிலவைத் தமுந்முடடித், தோளினிற முந்திலைகத்தசு சுமந்துபோறவளர்ந்த, ஆளனைக் கிணற்றிற்றள்ளி யழகிலாமுடவற்சோந்தாள், காளமோ கண்ணிறைக கனவிலுமநம்பொணாதே.

(இ-ள்.) வெவ்விய சிங்கங்கள் வாழுய காளகத்தில், துடையி லிருத்தியனமூட்டித, தோளிறுக்கிச்சுமந்து அனபாகவளர்த்துவந்த புருடனையும் கிணற்றிற்றள்ளி, ஓரழகிலலாத முடவனை ஒருத்திகூடினுள். ஆதலால் விடந்துகசொப்பான கணணுடையவரை கனவிலும நம்பத்தகாது. எ - று.

சேய்கொண்டா ருங்கமலச் செம்மலுடனே யர
வப், பாய்கொண்டா ரும்பணியும் பட்டீச் சுரத்தானே,
நோய்கொண்டா லுங்கொள்ளலாம் நூறுவய தாமளவும்,
பேய்கொண்டா லுங்கொள்ளலாம் பெண்கொள்ள லாகா

(இ-ள்.) சிவந்த நிறத்தைக்கொண்டு விளங்குந்தாமரைமலரிலுள்ள பிரமதேவனும், ஆதிசேடனைப் பாயலாகக்கொண்ட மகாவிஷ்ணுவும், வணங்கித்துதிக்கும்படியாகத், திருப்பட்டீச்சுரத்தலத்தில் எழுந்தருளிய சிவபெருமானே (ஒருவன்) நூறுவயதளவும் வியாதியையும் கொள்ளலாம், பேயையுங் கொள்ளலாம், பெண்களைக்கொள்ளல் ஆகாது. எ - று. (௮௫)

கஸ்தூரிமுதலிய
வாசனைவஸ்துக்களை விற்பனைசெய்பவர்,
ஒருவேடன் குடியிருப்பிற்சென்று,
தங்கள் வர்த்தகத்தைக்
காட்டியபோது
நடந்தசம்பாஷணை.

நானமென்பது மணங்கமழ் பொருளது நாவினுண்
பதார்த்தமோசொல், ஊனுணங்கு வேய்மடந்தை யாரணிவ
தாமுயா முலைத் தலைமீசாடில், ஆனதங்கது பூசினால் வி
ளங்கிய தமையுமோ வெனக்கேட்கக், கானவேட்டுவச் சே
ரியிட்டகன் றனர்குடி கமழ் விலைவாணர்.

(இ-ள்.) (வர்த்தகர்) நானமென்பது வாசனைகமழும் பொருளென்ன (வேடர்) நாவினால் சுவைத்துச் சாப்பிடத்தக்க பதார்த்தமோ சொல்லென்ன, (வர்த்தகன்) ஊனுண்பவனே! ஸ்திரீகள் விசாலித்த முலையினிடத்து அணிந்துகொள்ளும் வாசனைத்திரவியம் என்ன, (வேடர்) அதைப்பூசில முலைவீக்கம அமுங்கிவிடுமோ? வென்ன. (வர்த்தகன்) அக்கானகத்திலுள்ள வேடர் குடியிருப்பைவிட்டு நீங்கினார். எ - று. (௮௬)

கொண்டுவிண்படர் கருடன்வாய்க்கொடுவரிநாகம்
விண்டநாகத்தின்வாயினில் வெருண்டவன்றேரை
மண்டுதேரையின் வாயினிலகப்படுவண்டு
பண்டுதேனுகரின்பமேமானிடவின்பம்.

(இ-ள்) கருடன்வாயினிடத்தகப்பட்டு ஆகாயத்திற்கொண்டுசெல்லும் நீண்டநாகமும், அந்நாகத்தின்வாயில் அகப்பட்ட தேரையும், அத்தேரையின் வாயிலகப்பட்ட வண்டும், அத்தகையவண்டானது மதுவையுண்ணும் இன்பத்திற் கொப்பேயாகும், இவ்வுலகத்திலுள்ள மனிதர்களனுபவிக்கும் இன்பங்கள்.

கற்பூரப்பாத்திகட்டிக் கஸ்தூரியெருப் போட்டுக்க
மழ்நீர்பாய்ச்சிப், பொற்பூரவுள்ளியினை விதைத்தாலும
தன்குணத்தைப் பொருந்தக்காட்டும், சொற்பேதையரு
க்கறிவிங் கினிதாகவருமெனவே சொல்லினாலு, நற்போ
தமவாராதங் கவர்குணமே மேலாகநடக்குந் தானே.

(இ-ள்.) கற்பூரத்தால் வரப்புகளிட்டுக் கஸ்தூரியையே எருவாகத்தூவி, வாசனைநீரையே பாய்ச்சி, அழகுண்டாக, உள்ளியை அதில் நட்டுவைத்தாலும், அதின் குணத்தையே செய்கையாய்க் காண்பிக்கும். சொல்லத்தக்க அறிவிலாதவர்க்கு இனிமையான அறிவுவருமென்று எவ்வளவு சொன்னாலும், நல்ல குணமானது சற்றும் வராது. அப்போதும அவர்கள் தீயகுணத்தையே மேலாகக்காட்டுவர். எ - று. (அஅ)

## கண்ணயப் புரைத்தல்

தண்டுலாவிய தாமரைப்பொய்கையில்
மொண்டுநீர் முகத்தருகேகுதினாள்
கெண்டைகெண்டையென் றக்கரையேறினாள்
கெண்டைகாண்கிலள நின்றுதயங்கினாள்.

(இ-ள்.) கொடிகளமைந்த தாமரைத்தடாகத்திலுள்ள தண்ணீரைக்கையால முகந்து ஒருமங்கை தனமுகத்தினருகே, யேந்திப்பார்த்தாள், (அதனுட்டெரிந்த) கண்ணிழலைப பார்த்து கெண்டை கெண்டை, யென்று கூவிக்கொண்டே கரையி லேறிப பார்த்தபொழுது அக்கெண்டைமீனைக்காணாமல் திணறுமயங்கினாள். எ - று. (அகூ)

வருவசந்தனக்குழம்பு பரிசனையுறை வலம்பெறவ
ளைத்தாலும், சருவசம்பத்த மனமுள மாசனைத தழுவ
லுமாகாதே, பருவரங்கள்போற பலபலநவமணிப பைம
பொனை யீந்தாலும், செருவமிஞ்சிய மானிடர் நேசமு
மைகிட்டலுமாகாதே

(இ-ள்.) பொருந்திய சந்தனக்குழம்பு முதலிய வாசனைத்திரவியங்களையும், பலவித சுவையுணவுகளையும், அழகுபெற சேகரித்துத் தந்தாலும், எதிலுஞ்சந்தேகாஸ்பதமுண்டாக நடக்கும மாதர்களையணைதல்தகாது. மலையளவாகிய அநேக நவரத்தினங்கள அழுத்திய பசியபொன்னாபரணங்களைக் கொடுத்தாலும், செருவம மிகுதியுள்ள மனிதர்களின சிநேகம எவ்வளவும கொள்ளுதல கூடாது எ - று. (கூ0)

## தலைவிவனப்புரைத்தல்.

நிலத்தலை நீரின்மூழ்கி நின்றவளன்னைநேரோ
குலத்தலைமஞ்ஞைநாணி கூவெனக்காவிலேக
முலைத்தலையதனைக்கண்டு மும்மதக்கரிவந்துற்ற
தலைத்தலைசிங்கமென்றக் களிறுகண்டேகிற்றம்மா.

(இ-ள்.) பூமியினிடத்து ஜலத்தில முழுகிநின்ற ஒரு மங்கையை, கூட்டமாயிருந்த மயில்களநேரோபாரதது, அவள் சாயலுக்குபபயந்து கூவென றலறி, ஓர் சோலையிற்புகுந்தது. அவண்முலைச்சிகரத்தைக்கலசமு மும்மதங்களைப் பொழியாநின்ற யானைகள் தங்களினமெனறோடிவந்து அவளிடையாகிய சிங்கத்தைக்கண்டுபபயந்து ஓடிப்போயிற்று. எ - று. (கக)

## அற்பசந்தோஷிகளின் இயல்பைப் பற்றிக்கூறியது.

கரியொருதிங்களாறு கானவனமூன்றுநாளும்
இந்தலைப்புற்றில்நாக மின்றுணுமிரையீதென்று
விரிதலைவேடன்கையில் விற்குதைநரம்பைக்கவ்வி
நரியனார்பட்டபாடு நாளையேபடுவார்போதா

(இ-ள்) ஒரு வேடன் யானையின்மீது பாணப்பிரயோகம் பண்ணித் தானொரு நாகத்தாற்கடியுண்டு, அந்நாகத்தின் மீதே விழுந்து யானையுந் தானும், நாகமும், இறந்துகிடக்கக் கண்ட (ஒரு நரி) யானையோ! ஆறுமாதத்துணவாகும். வேடனோ! மூன்றுநாட் பொழுதுபோகும், புற்றுநாகமோ! இன்றுணவு இரையாகும், என்று சந்தோஷித்துக்கொண்டே விரித்தலையையுடைய வேடனது கையிலுள்ள வில்லின் குதைநரம்பைக் கடித்தமாத்திரத்தில், அது அறுந்து அதனால் அந்நரி இறந்தது. அதுபோலவே அற்பசந்தோஷிகள் வீணாசைகொண்டு துன்பப்படுவார்கள். எ-று. (௧௨)

பூதலத்தின் மானிடராய்ப் பிறப்பரிதெனப் புகலவர் பிறந்தோர்தாமும், ஆதிமறை நூலின்முறை யருள்கீர்த்தி யாக்கலங்க ளன்பாய்ச்சென்று, நீதிவழுவா தவனை வழக்குரைத்து நல்லோரை நேசங்கொண்டு, காதவழிபேரில்லார் கழுதையெனப் பாரிலுள்ளோர் கருதுவாரே.

(இ-ள்.) உலகத்தில் மானிடராய்ப் பிறப்பரிதெனச்சொல்வார்கள். அப்படிப்பிறந்தாலும் முதன்மையான வேதசாஸ்திரங்களின் முறைப்படி, கிருபை - புகழ், இவற்றையுடையவராய் ஸ்தலயாத்திரைசெய்து நியாயந்தவறாதபடி வழக்குகள் தீர்த்து, பெரியோர்களுக்கு வழிபாடுசெய்து, நல்லவர்களென்று காதவழிதூரமேனும் பேர்பெறாது இராதவர்களைக் கழுதைப் பிறப்பென்றே யாவருமிகழ்வார்கள். எ-று. (௧௩)

ஆரம்பூண்ட மணிமார்ப அயோத்திக்கரசே யண்ணாகேள், ஈரமிருக்க மரமிருக்க இலைகளுதிர்ந்தவாறேது, வாரங்கொண்டு வழக்குரைத்து மண்மேனின்று வலிபேசி, ஓரஞ்சொன்ன குடியதுபோ லுதிர்ந்துகிடக்குந் தம்பியரே.

(இ-ள்.) மாலையணிந்த அழகிய மார்பையுடைய அயோத்தியாபுரியையாளும் மகாராஜனாகிய அண்ணாவே கேட்பாயாக. ஈரமிருக்க மரமிருக்க அதின் இலைகள்மட்டும் உதிர்ந்துபோன காரணமென்னவென்று தம்பியானவன கேட்க, அதற்கு அவன் பூமிமேலிருந்து பட்சபாதமாய்த்தனது வல்லமையினால் வழக்குத்தீர்த்து ஓரவஞ்சனைசெய்பவர் குடிபோலஉதிர்ந்து கிடக்கின்றது தம்பி யென்றுரைத்தான். எ - று. (கச)

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

வலிபதனைக்கண்டஞ்சி மரங்கனிலேறும் வேடன், கொலைபசியைத்தீர்க்கரட்சித்த குரங்கைக்கொன்றான், நல்லவன் றனக்குச்செய்த நலமது மிக்கதாகும், புல்லர்கட்கெமக்குச்செய்தா லுயிர்தனைப் போக்குவாரே.

(இ-ள்.) புலியைக்கண்டு பயந்து ஓர் விருக்ஷத்திலேறியிருந்த வேடனுக்கு உயிர்நீங்கததக்க மிகுந்த பசியைத்தீர்த்து ரட்சித்த குரங்கை அவ்வேடனேகொன்றான். (ஆதலால்) நல்லோருக்குச்செய்த உதவிமிகுதியான நன்மையையேதரும். அற்பர்களுக்கு செய்தவுதவி செய்தவனுக்கே மிகுந்த அபாயம் உண்டாக்கும். எ - று. (கரு)

இக்கதை கபோதவாக்கியத்தி லுள்ளது.

தன்மானங் குலமானந் தன்னைவந்தடைந்த வுயிர்தங்கண்மானம, என்மானமாகியென்ன வெல்லவருஞ்சரியெனவே யெண்ணம்போந்து, நன்மானம் வைத்தொந்தாளுமவர் தங்களுக்கு நன்மைசெய்வோர், மன்மானியடைந்தோரைக் காக்கின்ற வள்ளலென்ன வழுத்தலாமே.

(இ-ள்.) தான் பிறந்த ஜாதியபிமானம், தன்னிடம்வந்து அடைந்தவர்களுடைய உயிர்போன்றமானம், முதலியவைகளை யும, தன்னுடையமானத்துக்ுச் சமானமாகக்க நதி நல்ல அபி மானம்வைத்து எந்தக்காலத்திலும், நனமை செய்யத்தக்கவர்க ள்யாரோ ? அவர்களையே ! பொருந்திய மானுபிமானமுள்ளவ ர்கள், அபையமென்றடைந்தவர்களை இரட்சிக்கததக்க வள்ளல் களென்று சொல்லுவார்கள். எ - று. (கூசு)

தன்னைத்தான புகழ்வோருந் தன்குலமேபெரிதென வே தான்சொல்வோரும், பொன்னைத்தான் றேடியறம் புரியாம லவைகாததுப் பொன்றினோரு, மின்னைப்போ ன்மனையாளை வீட்டில்வைத்து வேசைசுகம் விரும்புவோ ரும், அன்னைபிதாபாவலரைப பகைப்பாரு மறிவிலலாக் கசடராமே.

(இ-ள்.) தன்னையே புகழ்கின்றவாகளும், தன்ஜாதியை யே பெரிதென றுரைப்பவாகளும், பொருளைதேடி தருமஞ் செய்யாமல் புதைத்துவைத் திறப்பவாகளும், மின்னலைப்போ லும் (தேககாந்தியுடைய) மனைவியை வீட்டில்வைந்துப பரத் தையர் போகத்தை இச்சிககின்றவாகளும், தாய் தந்தை வித் வான்கள் முதலியோரை விரோதித்துக் கொள்பவர்களுமாகிய விவாகள், புததியில்லாத கீழ்மக்களாவார்கள். எ - று. (கூஎ)

பெண்டிகள் சொறகேட்கின்ற பேயரொனுங குண மூடப பேடிகளாபர், முண்டைகளுக் கிணையிலலா மு னைவீரர் புருடரென மொழியொணுதே, உண்டுலக முதி ர்ப்பாருள் கீர்த்தியற மின்னதெனறு மூணர்வேயிலலார், அண்டினவர் தமைக்கெடுப்பா ரழிவழக்கே சொலவுதவ ரறிவுதானே.

இ-ள் மங்கையர் சொற்களைக்கேட்கின்ற பேயர்களாகி ய குணங்கெட்ட பேடியனைய உலோபிகளும, விதவைகளுக் கும, ஒப்புரைக்கக்கூடாத சத்தவீரர்களுமாகிய விவாகளையும் ஆண்டன்மை யுடையவரெனச் சொலலக்கூடாது. உலகத்திற் பிறந்தவர்களுள், புகழும் - தருமமும், இன்னதென்று ஆராய்

ந்து அறியாதவர்களே அடுத்தவர்களைக் கெடுப்பவராவார், நியாயத்தைவிட்டு நியாயவிரோதமாகப் பேசுவதே அவர்கள் புத்தியாகும். எ - று. (௬அ)

பொருளொடுகுலக் கல்விவரில் கெர்வமுண்டா மகத்தோ
டுபொருந்துகு சேர்ந்தால், சொல்லாதுஞ் சொல்லுவிக்கு
ஞ் சொற்சென்று குடிகெடுக்கத் துணிவாகண்டாய், ந
ல்லோர்க்கிவ் மூன்றுமுண் டாகிலருளதிக ஞானமு
ண்டாய், எல்லோர்க்கு முபகாரராயிருந்து பரகதியை
யெய்துவாரே.

(இ-ள்.) துர்க்குணமுடையவர்களுக்குக் கல்வியுண்டாகில கருவம் அதிகப்படும். அக்கல்வியோடு செல்வமுங் கூடினால சொல்லத்தகாத வார்த்தைகளையுஞ் சொல்லும்படிசெய்யும். தன்சொல் எங்குஞ்செல்லத்தக்கதாயிருந்தால, குடிகளைக்கெடுக்கவுந் துணிவார்கள். நற்குணமுடையார்க்குக்கல்வி, செல்வம், சொற்செல்லுதல், ஆகியஇந்தமூன்று முண்டாகில அருளும ஞானமும்பெற்று யாவருக்கும உபகாரிகளாக இருந்து முத்தியடைவார்கள். எ - று. (௬௯)

## தலைவி நலங்கூறல்.

உந்தியின் சுழியின்கீழ்சே ரோமமாங் கரியநாகஞ்
சந்திரனெனவே யெண்ணித் தையலாள் முகத்தைநோக்
மந்திர கிரிகளாமிவ் வழிமறித்திடுதல்கண்டு [க
சிந்துரக் கயற்கண்ணோடிச் செவிதனைக் குழைத்ததம்மா.

(இ-ள்.) உந்திச்சுழியாகிய நாபிக்கடுத்துள்ள உரோமமாகிய கரியநாகமானது (எனது தலைவியின்) வதனத்தைச் சந்திரனென்று கருதிமேலநோக்க, முலைகளாகிய மந்தரமலைகளெருவழியைத்தடுத்துக் கொள்ளுதலைப்பார்த்து, செவ்வரிபரந்த கயலைபோலுங் கண்கள் ஓடி செவிகளுக்குச் சொல்லியது.

## இதுவுமது.

மாகமாமேடைமீதில மங்கைநின்றுலாவக்கண்டு, வ
ானமதியென்றெண்ணி யிராகுவந் துற்றபோது, பாகு

சேர்மொழியினாளும் பதறியே பாதம் வாங்கத், தோகை
மாமயிலென்றெண்ணித் தொடர்ந்தராமீண்டகன்றே.

(இ-ள்.) வானமளாவிய மேடைமீதில் (எனது தலைவி யான) மங்கைப்பருவமுடையவள் நின்று உலாவுகையில் ஓட பற்ற பூரணச்சந்திரனென்று நினைத்து (நவக்கிரகத்திலொன்று கிய) இராகுவென்னுங் கரும்பாம்பானது வந்து நெருங்கிய பா லபோலும் மொழியையுடையாள் மனம்பதறித் தனதுபாதங்க ளைக்குந்த நடக்கையில (அவள் சாயலைக்கண்டு) தோகைகளையு டைய மயிலென எண்ணி அப்பாம்பு திரும்பிவிட்டது எ-று

சலதாரை விழுந்தருஞ் சாகரத்தன்னைச் சார்ந்தாற்,
ஜலமென்றே கொள்வதல்லாற் குறைபட வெறுப்பதுண்
டோ, புலவர்கள் சபையிற்கூடிப் புன்கவியாளர் சார்ந்
தால், நலமென்றே கொள்வதல்லா னிகழ்வரோ பெரி
யோர்குற்றம்.

(இ-ள்.) சலதாரையில் ஒழுகும் நாற்றமுள்ள) தண்ணீரு ம, சமுத்திரத்திற்புகுந்தால், அதைத்தண்ணீரென்று ஏற்றுக் கொள்ளுமல்லாமல வெறுத்துத் தள்ளுவதுண்டோ ? இல்லை. (அதுபோல) பெரியவித்துவான்கள் சபையில் சிறிய நாற கேள்வியில்லாத) அற்பகவிஞர்கள்வந்து சேர்ந்தாலும், கற்றவர் களென்று ஏற்றுக்கொள்ளுவரல்லாற் குற்றஞ்சொல்லார்கள்.

காரெனுங்குழல் கடப்பிக் கடுஞ்சிலை வாளி தப்பி
மாமலை வளர்ந்தின்ற வேழத்தின் கோடு தப்பித்
தாநறு கரியரோமச் சங்கிலிவழியே சென்று
சிறியனென்னவளர்ந்த செவ்வலைக் குழிற்கைகைதான்.

(இ-ள்) கூந்தலாகிய மேகத்துக்கும் (புருவமாகிய) விற் லம்புகளுக்கும், மகாமேருபோன்ற முலைகளாகிய யானைத்தந்த ங்களுக்கும், தவறி உரோமமாகிய சங்கிலியின் வழியேசென்று

மேன்மையாய்வளர்ந்த செல்வத்தையுடைய எனது நாயகனானவன் அலகுலாகிய (பாம்புப்படத்) திற்கரங்களைச் செலுத்தினான். எ - று. (௧௦௫)

உண்டதை யொழிக்கும் வாசலோரகீ ரொழித்து
மேலே, வண்டலு மழுக்குஞ்சேரு முதிரமு மாறுவாச
ல், உண்டத னிருப்பைகண்டு பெருங்களி யுள்ளங்
கொண்டு, கண்டவரினைஞரெல்லாங் கதியெனக் கருதுவா
ரே.

(இ-ள்.) உண்ட உணவுகளை (ஜீரணிக்கச்செய்து) வெளியிற்றளளும, குதவாயலையடுத்து உவர்நீரொழுக்கிச் சேறனையவழுக்குந்திரண்ட இரத்தம மாறுசவாசல ஒன்றுண்டு. அதனிருப்பைப்பார்த்துப் பெருத்த சந்தோஷத்தை மனதிற்கொண்டு வாலிபர்கள் இதுவேமோட்சமென்று கருதுகின்றார்கள். எ-று.

கரந்தொருவன் கணைதொடுக்க மேற்பறக்கும
சாளி காத்துங்கண்டே, ஊரந்து சிறுகானகத்தி லுயிர்ப
புறா பேடுதனக் குரைக்குங்காலு, விரைந்து விடநீண்ட
வுயிர் விடுமவேடன் கணையால்வல் லூறும்வீழ்ந்த, தா
ன்செயலே யாவதல்லாற் றன்செயலா லாவதுண்டோ வ
றிவுள்ளோரே.

(இ-ள்) ஒரு காட்டில் ஒளிந்திருந்து வலியகணை தொடுக்கும் வேடனைக்கண்டு பயந்துபறந்த புறாக்களிரண்டில் ஆண்புறாவானது பெட்டைப்புறாவைப்பார்த்து, நம்மைப பக்ஷிக்கக்கருதி பூமியில வேடனிருக்கின்றான். ஆகாயத்தில இராஜாளிப்பட்சி பறக்கின்றது. யாது செய்வோமென்று விசனப்பட, அந்த சமையத்தில அவ்வேடனை புதரிலிருந்த பாம்புகடித்துஅதனாலவன் இறக்க, அவன் கையிலலிருந்த அம்பு விடுபட்டு மேறபறந்த இராளியைக்கொன்று வீழ்த்தியதென்றால், எலலாம கடவுள செயலாலாவதல்லால், தன் செயலாலொன்றுமாவதில்லை. எ - று. (௧௦௬)

† கொல்லுலை வேற்கயற்கண் கொவ்வையங் கனிவாய்மாதே, நல்லணி மெய்யிற்பூண்டு நாசிகாபரணமீதிற், சொல்லரிற் குன்றிதேடிச் சூடியதெனனோ வென்றான், மெல்லியல் கண்ணும்வாயும் புதைத்தனள் வெண்முத்தென்றாள்.

(இ-ள்.) கொல்லனுலையிற்காய்ச்சிக் கூர்மைசெய்த வேலாயுதமும், கெண்டைமீனையுமொத்த கண்களும, கொவவைப்பழம்போன்ற செவந்தவாயினையுமுள்ள பெண்ணே? நலல ஆபரணங்களை தேகத்திலணிந்து நாசியினாபரணத்தில் குற்றம பொருந்திய குன்றிமணியைப்புனைந்தது யாதுகாரணம? என்ன, அம்மென்மையையுடையவள் (வெட்கித்தனது) கணணையும் செவ்வாயையும் மூடிககொணடு வெள்ளை முத்தென்று சொன்னாள். எ - று. (௧௰௬)

தலைவன் கூற்று.

கலிநிலைத்துறை

அருகிலிவளருகிலிவ ளருகிலரவுருகுங்
கரியகுழன்மேனியிவள் கானமயிலசாயல
பெரியகனமிடைசிறிது பேதையிவளையோ
தெருவிலிவணின்றநிலை தெய்வமெனலாமே

(இ-ள்.) கறுப்புநிறம் பொருந்திய கூந்தலையும, அழகிய மேனியையும், கானமயிலைப்போலுஞ் சாயலையும, பாரிததமுலைகளையும், சிறுததவிடையினையுமுள்ள பெண்ணானவள, பககததில்வர, மனமானதுருகும. ஐயோ! வீதியில இவள நிற்கும நிலையைநோக்கில தெய்வப்பெணணென்றே மயங்கிச்சொலலுதல வேண்டும. எ - று. (௧௰௭)

பாங்கிகூற்று.

அலகுவாள்விழி யாயிழைநன் னுதற்
றிலகங்கணடெதிர் செஞ்சிலைமாரனுங
கலகமேசெயுங கண்ணிதுவாமென
மலரம்பைந்தையும வைததுவணஙகினான்.

(இ-ள்) வாளாயுதத்தை யொத்தகண்ணுடைய (எங்கள்) கன்னியினது நல்ல நெற்றியிலுள்ள பொட்டினழகை, செவ்வி மவில்லையுடைய மன்மதன் கண்டு, கலகம்விளைக்கும், கண்ணே வென்று நினைத்து தன்மலரம்புகளைக்கதையும (அவள் முன்) வைத்து வணங்கினன். எ-று. (௧0௮)

குரங்குநின் றுகூத் தாடியகோலத் தைக்கண்டே
அரங்குமுன் புநாய் பாடிக்கொண் டாடியவதுபோல
கரங்க ணீட்டியே பேசியகசடரைக்கண்டு
சிரங்க ளாட்டியே மெச்சிடு மறிவிலார் செய்கை.

(இ-ள்.) குரங்கு கூத்தாடிநின்ற அழகைப்பார்த்து, ஒரு நாய், தானும் அவ்வாறாடக்கருதி ஊளைப்பாட்டுடன் வீதியில ஆடியதுபோல, கைகளைநீட்டிப்பேசும். மூடர்களைக்கண்டு மெச்சித் தலைகளையாட்டித் தங்களைத்தாங்களே மெச்சிக்கொள்வது அறிவிலலாரதொழில். எ-று. (௧0௯)

## அறுசீரடி யாசிரிய விருத்தம்

வில்லது வளைந்ததென்றும் வேழமது றங்கிற்றென்
றும், வல்லியம் பதுங்கிற்றென்று வளர்கடா பின்றிற்றெ
ன்றும், புல்லர்தஞ் சொல்லுக்கஞ்சிப் பொறுத்தனர் பெரி
யோரென்றும், நல்லதென் றிருக்க வேண்டாம் நஞ்செனக்
கருதலாமே

(இ-ள்.) வில்வளைந்து கொடுத்தல், யானை நித்திரைசெய்தல, புலிபதுங்குதல, கடாய்பின்வாங்குதல், கீழ்மக்கள் சொல்லுக்குப்பயந்து பெரியோர் பொறுமையோடிருத்தல, இவைகள் யாவையும் நன்மையென்று நினைக்கக்கூடாது. விஷமென்றே சிந்திக்கவேண்டும். எ-று. (௧௧0)

சலங்களிற் கிடக்குமாமை சலத்தைவிட் டகன்ற
போது, கொலைபுரி வேடன்கண்டு கூரயிற்கொண்டு செல்
ல, வலுவினா லவனைவெல்ல வகையொன்று மில்லையென்
றே, கலைவெலி காகஞ்செய்த கதையெனவிளம்புவோமே.

(இ-ள்) தண்ணீரிலிருந்த ஓராமை கரையில் வந்தபொழுது அதைக்கொல்லுந் தொழிலையுடைய ஒருவேடன் பார்த்துப் பிடித்து வலையிலிட்டுக்கட்டிக்கொண்டுபோக, அந்த ஆமைக்குப் பிராணசிநேகிதமாக விருந்த ஒருமானும், எலியும், காகமும், தங்கள் வல்லமையினாலே அவ்வேடனை ஜெயிக்க யாதொருவகையிலுமுடியாதென்று நினைத்து, ஒருவித தந்திரத்தால ஆமையைத் தப்புவித்ததையேயாகும், (நீ செய்தகாரியம)

நிலமதிற குணவான்றோன்றி னீள்குடித்தனரும்.
வாழ்வார், நலமெலாம் வாசநதோன்றுஞ் சந்தனாரத்
திற் கொப்பார், நலமிலாக் கயவன்றோன்றி னவ்வுகுடித்
தோம்பாழாக, குலமெலாம் பழிநமொயும் கோடரிக்
காம்பென்றாம

(இ-ள்) உலகத்தில் நற்குணமுடைய ஒருவன் பிறந்தால், அவனாலே அவனதுகுலமுழுதும், வாழ்வையடைய, சந்தனவிருட்சம்போல எத்திசையினும் புகழடைவார், ஒழுக்கமில்லாக்கீழ்மகனுதித்தால் அவன் குலமும், சேதமும், பழியடையும். கோடரிக்காம்புபோல தன் [illegible] கெடுக்கும் [illegible] என்றவாறு க - து. (௪௨)

கிளிப்பிள்ளைக் கைநெலிக் — [illegible]
[illegible]

பன்னிர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

— உயிரனையா னுடனகன்ற வுனாதிந்தி லெட்டினர னைதேரா னுடன்றிசசெய்கை, செயலிலானென்றிலே மலாக்காலயானந் தணவாக்கல் வினவனையுந் தீதென், றயி லவிழியாய மயற்பொழுது ழுவளிக நிழுமபெணமதியெ னது வழமுழின், இயலெனா வளருவருணாகதார் சானுய நீயெனப புகனரே னினபுறமே.

(இ-ள்.) வேல்போலுங் கூரிய கண்களையுடைய தோழியே! எனதுயிரினுஞ்சிறந்த சோரநாயகனிடத்தில் நான்கூடிக் குலாவிவரும் மர்மத்தை எனது சொந்தநாயகனறிந்து, இவ்வளவு காய்மறைவென்றில்லாமல் என்மேற் கோபங்கொண்டு, இப்படிப்பட்ட தகாதகாரியஞ்செய்யத் துணிந்ததைக்குக்காரணம் யாதென்றுகேட்க, அப்போதுநான், உண்டென்பதும், இல்லையென்பதுமாகிய விரண்டுகாரியங்களும் குறையாகவே முடியுமென்றெனக்குள்யோசித்து, காமம்பொதுவென்றும், தலையிலெழுதிய வெழுத்துத்தவறாதென்றும் சொன்னேன் அவ்வாறுரைனிலு மதிககோபங்கொண்டு. விதியைமதியால் வெல்லக்கூடாதோவென்ன, அதற்கு நான் ஐயோ வென்புத்தி யென்புத்தியல்லவா ஆண்மக்களுக்குள்ள சிறந்தபுத்தியும், ஊழின்படியே நடக்குமென்று, பெரியோர் கட்டளையிட்டிருக்கின்றார்களே, மேமும இதற்குச்சாட்சிதாங்களே பிரத்யட்சமாயிருக்க வேறுதேவையோவென்றேன், அதைக்கேட்டு மனமகிழ்ந்தனர். இதைநீயறிவாயாக. எ - று. (௧௧௩)

நட்பிடைக் குய்யம்வைத்தார் பிறர்மனைநலத்தைச் செய்வார், சட்புடைக் காமந்தீரார் கன்னியை விலக்கினோர், அடுபடை யஞ்சினோரோ டாயுதங் கொண்டுநின்றாரு குட்டநோய் நரகில்வீழ்ந்து குளிப்பவரிவர்களென்றவாம்.

(இ-ள்.) சிநேகத்தில் வஞ்சகஞ் செய்தவரும், அயலான் மனைவி, இன்பத்தைப் புசித்தவனும், காமாக்கினியால் வருந்துவோர் கன்னியை அவள்விட்டுத் தணியக்கலவாதவரும், கொலைத்தொழிலை மேற்கொண்ட போர்க்களத்தில், பயந்தோடியவரும், (ஆகிய இவர்கள்) குஷ்டவியாதியடைந்து நெடுநாள் உலகத்தில் துன்பத்தை யனுபவித்தப்பின்பு நரகத்தில் விழுவார்கள். எ - று. (௧௧௪)

மதியிலா மறையோன்மன்னன் மடந்தையை வேட்டையாலே, குதுவத்து காலந்தன்னிற் றேவுமென் றனைந்

தேயாற்றில், புதுமையா யெடுக்கபோது பெட்டியிற் பு
லியாயாலே, அதிருடன கடியுண்டானறே யருநரகடைந்
தானமாமே தா.

(இ-ள்.) விவேகமற்ற வோர்பிராமணன் தனனிடத்துக் கல்வி பயின்றுவந்த இராஜகுமாரத்தியின மீது வியாமோகங் கொண்டு அவள புஷ்பவதியானகாலம மிகவுந் தோஷமுடையதென்றும, உடனே அவளைபபேழையு ளடக்கஞ்செய்து நதிமுதலிய நீரோட்டங்களில விட்டுவிடவேணடுமென்றும அவள தந்தையாகிய அரசனுக்குத்தெரிவித்து, அவவாறே செயவித்துப, பினபு தான அந்தபபெட்டியைத தேடிக்கொணடு ஆற்றோரமாகச் சென்றோரிடத்தி லப்பெட்டியைக்கணடு அதை யெடுத்தாசையுடனே திறக்க, அதற்கு முனனமே, வேட்டையாடிவந்த வேறொரு அரசன அப்பெட்டியைப்பார்த் தெடுத்துத்திறந்து, அதற்குள்ளிருந்த கன்னிகையை யழைத்துக்கொணடு வேட்டையிலகப்பட்ட புலியை யதிற்போட்டுப பூட்டிப் பழையபடி யாற்றில விட்டுவிட்டானதலால, அப்பெட்டிக்குள்இருந்தபுலி யப்பிராமணனையடித்துக்கொலல, அதனால இறந்து நரகத்தையடைந்தான். எ - று. (௧௧௫)

மையந்து வல்லியமவாழ் மலைக்குகை தனிற்புகுந்தே
ஐயமும புலிக்குக்காட்டி யடவியிற றுரத்துங்காலை
பையவே நரிந்தகோளாலே படுபொருளுணரப்பட்ட
வெய்யவம் மிருகங்காணே கொன்றிட வீழ்ந்ததன்றே.

(இ-ள்) ஓராட்டுக்கிடாவானது புலியிருக்குமபடியானவொரு குகைக்குட்புகுந்து அப்புலியை ஒருவிதமாய் மிரட்டிச் சந்தேகத்தைக்காட்டிக் காட்டினவழியாய விரட்டுகிறகாலத்தில், எதிரில்வந்த ஒரு நரியின்கோளால அப்புலியானது உணமையைத தெரிந்துகொணடு அவ்வாட்டின்மேல பாய்ந்துகொல்ல ஆட்டுக்கிடாயிறந்தது. எ - று. (௧௧௬)

நீ மங்கைக்கை சொற்கேட்டு மன்னாபுகழ் தசரதனும் மரணமானான, செங்கைமலச் சீதைசொலலை

சீராமன் சேட்டவுடன் சென்றான்மான் பின், தங்கையவள்
சொற்கேட்ட ராவணனுங் கிளையோடு தானுமாண்டான்,
நங்கையர் சொற் கேட்பதெல்லாங் கேடுவரும் பேருல
கோர் நகைப்பர்காணே

(இ-ள்.) அரசர் புகழும் தசரதன், கைகேசியென்னும் மனைவியின் சொற்கேட்டு மரணமடைந்தான். ஸ்ரீராமபிரான் ஜானகிசொற்கேட்டு மானின்பின்சென்று வருந்தினன். இராவணன் தன் தங்கையாகிய சூர்ப்பநகையின் சொற்கேட்டுத் தன் சுற்றத்தோடு மாண்டான். ஆதலால் ஸ்திரீகள் சொற்கேட்பதெல்லாம் துன்பத்திற்கே யிடமாகும் உலகத்தாரும், நகைப்பார். எ - று. (கக௭)

அதிகாரம்பிரிவாகட்பக் கவமதிப்புறுவர்களோ
அதிநேயப்பட்டுச்செட்ட துணைபிரித்திடுவரென்றால்
மேவியன்பவர்வாயில் வேசைநாய்ப்பச்சைநாவி
பூசிப்பனைபோலாகி யுறுசெய்துவாரோ.

(இ-ள்.) முதலில் ஒற்றுமையான சிநேகத்தைக் கொண்டிருந்த இருவருள், ஒருவரை, மற்றொருவர் அவமதிக்கவேண்டுமென்றெண்ணி, அதற்குரிய வஞ்சகங்கள் பலவாகச்செய்து, அதனால் பகைநேர்ந்து ஒருவரைவிட்டொருவர் பிரிந்து, ஒரு பார்ப்பானவன், தன் மகனோடு இணைபிரியாது கூடிக்குலாவி யிருந்த ஒரு பிராமணனுடைய குடத்தில் பச்சைநாவியை வைத்து ஆதியசத்தையை யொப்பாகும் எ - று (கக௮)

இக்கதை சிந்தாமணியிலுள்ளது.

அருமையும் பெருமைதானு மறிந்துடன் பழகுவோர் தம்பால், இருமையு மொருமையாகு மினப்புறக்கேண்டுவுண்டாம், பரிவிலாச் சகுனிபோலப் பண்புகெட்டவர்கள் தம்பால், ஒருமையினிரயமெய்து மேதுமே யுபருமன்றே.

(இ-ள்.) ஒருவருடைய அருமை பெருமைகளையறிந்து உடன்பாடான சிநேகஞ்செய்வார்களாகில், இம்மை, மறுமை இருமையினும் ஒரேவிதமான இன்பத்தையடைவதற் கேதுவுண்டாகும் சகுனியைப்போல் அன்பில்லாமல் துற்குணங்கொண்டவர்களின் சிநேகத்தால் மேன்மேலும் பாவங்களே அதிகப்பட்டு நரகவேதனையுமுண்டாகும் எ - று (கூகூ)

ஒருவனே யிரண்டியாக்கை யூனபொதி யானநாற்றம்
உருவமும் புகழுமாகு மதற்குள் தீவினைபடுற்று
மருவிய யாக்கைதன்கே மாய்ந்திடு மறியாக்கை
திரமதா யுலகமேத்தச் சிறந்துபின் னிற்குமன்றே

(இ-ள்) உலகத்தில் மனிதர்களுக்கு, பொய்யுடம்பென்பதும், புகழுடம்பென்பதும், இரண்டுடம்புகளுண்டு அவற்றுள் தீ வினைகளை நுகர்வதற்கேதுவாகிய நாற்றமெடுக்கின்ற மாமிசபிண்டமாகிய பொய்யுடம்பு இவ்வுலகத்திலேயே நிலையின்றி மாய்ந்துவிடும் புகழுடம்போவெனில் இம்மை மறுமைகளுக்கேதுவாய் என்று மழியாமல் உலகமெங்கும் பிறந்தபடியே நிலைநிற்கும். எ - று (௧௨௦)

வேலியானதுபயிர்தனை மேய்ந்திடில் சிறைகாத்த
காலனானவனுயிர்களைக் கவர்ந்திடநினைந்தால்
ஆலமன்னையர்பாலகர்க் கருத்துவாரானால்
மேவிச்சேர்ந்துடனியார் கொலோவிலக்குவார்வேந்தே.

(இ-ள்.) அரசனே! காவலாக விடப்பட்ட வேலியே பயிரையுண்ணவும். எமன் உயிர்களைக் கவரவும் கொல்லத்தக்க விஷத்தைத் தாய்மார்களே பிள்ளைகளுக்கூட்டவும் நினைப்பார்களாகில் இதையறிந்து தடுப்பவர்யார். எ - று. (௧௨௧)

## அறுசீரடி யாசிரிய விருத்தம்.

அறங்கெடு நிதியுங்குன்று மாவியு மாயுங்காய, நிற
ங்கெடு மதியும்போகி நீணடசோர் நரகிற்சோக்கு, மறய

கெடு மறையோர்மன்னர் வணிகர்நல்லுழவோ ரென்றுங்,
குலங்கெடு வேசைமாதர் குணங்களை விரும்பினோர்க்கே.

(இ-ள்.) சாதகுணத்தையுடைய வேதியர், அரசர், வைசியர், உழவினர் எனனும ஜாதிகளினுயர்வைக் கெடுக்கத்தக்க, பரத்தையரை இச்சித்தவர்களுக்கு தருமங்கெடும், செல்வம குறையும், உயிரழியும், தேககாந்தியுமாறும், புத்தியுங்கெட்டு நீண்ட நரகத்தையடைவார்கள். எ - று. (௧௨௨)

இரண்டு சகோதரிகள் தங்களிடங் கலந்த
இரண்டு தலைவர்களைப் பற்றிக்கூறியது.
கட்டளைக்கலித்துறை.

அரவிந்தநண்பன சுதன்றம்பி மைத்துனன் றமைய
ன்கையிற், படைமுகந்தியாயுதம பூண்டவன் காணுமற றங
கயிலை, பாமணிகிரியை யேந்திய மைந்தன் பகைவன்
செவ்வடைப், புரமெரித்தவன மாற்றானறன் சேவக
னென்னவொடியே

(இ-ள்.) தங்காய? என் வீட்டிற்குவந்தவன. தாமரைக்குச் சிநேகனாகிய சூரியன, அவன்புத்திரன் கர்னன, அவன்தம்பி அருச்சுனன, அவ்வருச்சுனன மைத்துனன, கிருஷ்ணன். அக்கிருஷ்ணனது தமையன பலராமன, அப்பலராமன கையிலுள்ள ஆயுதம கலப்பை, அக்கலப்பையைப் பூண்டிருப்பவனாகிய பெருமைக்கடாவென்றறிவாயாக, வென்றுசொல்லி, உன் வீட்டிற்குவந்தவன் யாரென்றுகேட்க, தமக்காய்? சிவபெருமான வசிக்கும் கயிலைமலையையெடுத்த விராவணன், அவ்விராவணனுக்குப பகைவனாகிய ஸ்ரீராமபிரானுக்கும் தாசத்துவம பூண்டவனும, அவ்விராவணனோடு பகைத்து எதிர்த்தவனும, பாவங்களையெல்லாம் இலேசாகப் பெயர்த்தெடுத்தவனுமாகிய ஆஞ்சநேயன், எனவே குரங்கென்றறிவாயாக. (எ - று)

இரண்டு கண்பர்கள் தாங்கள் கலவிசெய்த
மங்கையர்க ளியல்பைக்கூறியது

சங்கரன்றேவிதமையன் மனைவிதனக்குமுன்னும்
மங்கையரோறியவாகனங் காணுமற்றங்கவளோ
கொங்கைகளீரைந்துடைய வளாயிக்குவலயத்தில
எங்குமதிரியுமவயிரவருர்தி பெண்ணேநினையே

(இ-ள்) ஒருவன் மற்றவனைப்பார்த்து நண்பனே! நீகலந்த மங்கை எந்தனைமையனென சிவபெருமானுக்கு நாயகியாகிய பார்வதி, அப்பார்வதியின் தமையன், விஷ்ணு அவ்விஷ்ணுவின் மனைவி, இலக்குமி, அவளிலக்குமிக்கு முன்பிறந்தவள் மூதேவி, அம்மூதேவியானவளேறிய வாகனமாகும், எனவே கழுதையென்று கூற, அதைக்கேட்ட மற்றவன், நான் கலந்த மங்கையோவெனில், வயிரவக்கடவுளின் வாகனமாயும், பத்துமுலைகளை யுடையனவாயும், ஊரெங்குந்திரிகிற நாயென்றறிவாயாக என - று. (கஉச)

இந்திரன்பதங்கள்குன்று மிறையவர்பதங்கண்மாறு
மந்தரநிலைகள்பேற மறுகபலவறுமையாகும்
சந்திரன்கதிரோன்சாயுந் தரணியிற்றேயமாளும
அந்தணர்கருமங்குன்றில யாவரோவாழ்வாமனைனில்

(இ-ள்.) வேதியர்கள் தாங்கள் செய்யத்தக்க கிரியைகளை செய்யாதொழிந்தால இந்திரனது செல்வங்களும், குறையும. இராஜர்கள வாழ்க்கையும மாறும். மந்தரமலையினது நிலைகளும் பெயரும. எவ்விடங்களினும வறுமை மிகுதியாம. சந்திர சூரியர்களும நிலைகெடுவார்கள். பூவுலகமெல்லாம் பொலிவழிந்து நிற்கும். உலகில வாழத்தக்கவாயார். என - று. (கஉரு)

## தலைவி கூற்று.

என்னைக்கன்று முத்தனைக்குனிக்கு மிறையனை யனைக்குமேயனறு, மனனனைகன்றிப் பினனனைக்குதவ

னைப்பாலவருந்தி னுடுவேனோ, முன்னனைக்கொன்று பின்னனைப்பார்த்த முதுபகையவன் பிதாவுறாமல், கன்னனைக்கொன்று விசயனைப்பார்த்த கவுத்துவ ராமகிருஷ்ணனையே.

(இ-ள்) என்தாய்க்குமாத்திரமல்ல, மூத்தக்குத்தாயான தருமதேவி யல்லாதவளுக்கும் மன்மதனுக்குத்தாயாகிய இலக்குமிக்குப் பிறப்பிடமான சமுத்திரத்தாலும் பெற்றதாய்க்கேயல்லாமல் பின்வளர்த்த தாய்க்கு முதலாகவுள்ள குயிற்பட்சியாலும், துன்புற்று வாட்டமடைவேனோ? இராமாவதாரத்தில், மூத்தவனாகிய வாலியைக்கொன்று இளையவனாகிய சுக்கிரீபனை இரக்ஷித்த பழமையான பகையை, அவன் தந்தையான இந்திரன் அடையாமல் கிருஷ்ணாவதாரத்தில் கர்ணனைக்கொன்று அர்ச்சுனனை இரக்ஷித்த கௌஸ்துபாபரணமணிந்த இராமகிருஷ்ணனே. எ - று.

...ஷ்டமை - என்பது கஷ்டமென்னும் பொருளுக்கும் இடமாயினது. (௧௨௬)

## நேரிசை வெண்பா

பண்புள்ளவர்க்கோர் பறவை பாபத்திற்கோரிலக்கம்
நண்பிலரைக் கண்டக்கா லூர்காலி — இன்புவியை
ஆள்வார் மதுரை யழகியசொக்கர்க் கரவம்
நீள்வாகனத்தன் னிலம்.

(இ-ள்) நற்குணமுள்ளவருக்கு, ஈ - (கொடு) பாவஞ்செய்கைக்கு, அஞ்சு - (பயப்படு) நட்பற்றவரைக்காணில், விலங்கு - (நீங்கு) வலிமிகுந்த உலகத்தை ஆளும்படியான மதுரை சோமசுந்தரேசருக்குப் பணிவிடைசெய். எ - று.

அரவம் நீள்வாகனத்தன்னிலம் என்றதில

அரவம் - பணி. வாகனம் - விடை. நிலம் - செய். எனவே பணிவிடைசெய்யென்பது பொருள். (௧௨௭)

இதுமும்மூர்த்திகளின் உவாதிகளைப் பற்றிக்கூறியது.

சிறுவனைப்பயறு செந்நெற்கடுகு
மறிதிகிரிதண்டு மணிநூல்—பொறியரவம்
வெற்றேறுபுள்ளன்னம் வேதநாரணமாலுமருக்கும்
கற்றுழாய்ப்பூவே கறி.

(இ-ள்.) பிரமனுக்குப்பயறு, கறியும், செந்நெல், உணவும், தண்டம், ஆயுதமும், உபவீதம், பூஷணமும் அன்னம், வாகனமும், தாமரை, வசிக்குமிடமாகுமாம். விஷ்ணுவுக்கு, வெண்ணெய், கறியும், பூமி, உணவும், சக்கரம் ஆயுதமும் கௌஸ்துவம் ஆபரணமும், கருடன் வாகனமும், கடல், வசிக்குமிடமுமாகும், சிவபெருமானுக்கு பிள்ளைக்கறி, கறியும், விஷம், உணவும், மானை, ஆயுதமும், சர்ப்பம், பூஷணமும், ரிஷபம் வாகனமும் திருக்கைலாயம், வசிக்குமிடமுமாகும் எ - று.

சிரம்பார்த்தானீசனயன் றேவிதனைப்பார்த்தான்
கரம்பார்த்தான் செங்கமலக் கண்ணன்—உரஞ்சேர்
மலைவெளுத்ததிண்புயத்து வண்ணான்சிராமன்
கலைவெளுத்தநேர்த்திதனைக் கண்டு.

(இ-ள்.) சிவன், தலையைப்பார்த்தான், பிரமா, தன்மனைவியைப்பார்த்தான். சிவந்த தாமரைபோலுங் கண்ணன் தன் கையைப்பார்த்தான். பருமையுடையமலையையும் வெளுக்கச்செய்யப்படியான புயமுடைய ஸ்ரீராமனென்னும் பெயரையுடைய வண்ணான், வஸ்திரம் வெளுத்துக்கொடுத்த நேர்த்தியைப்பார்த்தவுடனே. எ - று.

சரியொன்று பொன்பெறும் பையோர் நூற்றுவர்
நூற்றொழு, எரியொன்று செல்வன் அவைக்கு இனியே மனி
றுடைமருக, சொரிகின்ற நாயின் சோற்றினிலேற்றுக்
கொடாதவர், கரியொன்று சொந்தக் கனலேறிவந்து
நோகவந்தே.

(இ-ள்.) யானை உருவமனமைந்த கணபதி பெருச்சாளியி லேறியும், கல்வியான்கள் சூழ்ந்து துதிக்க முருகக்கடவுள் மயி லிலேறியும், சூல்கொண்ட மேகங்கள் படர்ந்து மழைபொழி கின்ற பருவதத்திலுற்பவித்த உமாதேவி அன்னப்பட்சியிலேறி யும், சமபுகந்தியிலேறியும் நம்மிடத்தேவந்தார்கள் எ-று. ()

மிகுபொன்னை=பெருச்சாளி. எரியொன்று செலவன் முருகன். தூலாஸ்நானக்கட்டம், மாயூரம்=மயில் நாகமினா= வளையுமை. சோறு=அன்னம். சொந்தக்கனல்=நந்தி, (நம்தி.)

ஒருபாதி மாலகொள மற்றொருபாதி யுமையவள்கொண் டாள், டிருபாதி யாலுமிறந்தான புராரியிரு கிதியோ,
பெருவாரிதியிற் பிறைவானிற் சாப்பம் பிலத்திறகற்ப,
தருவானபோஜ கொடையுன்கை யோடென் கைதந்த னாேன.

(இ-ள்.) ஒரு பாகத்தை விஷ்ணு கொள்ளவும், மற்றொரு பாகதைத உமையவள்கொள்ளவும, ஆக இரண்டுபாகத்தாலும் திரிபுரசமமாரகாத்தனை சிவன இறந்துபோயினன், சங்கிதி வானத்திலும. ஆதிசேடன் பாதாளத்திலும் புகுந்தது. போஜ மகாராஜனே ? கறபக விருட்சம்போலும் கொடைததன்மை யை உனகையிலும கையிலேந்திய ஓட்டை எனகையிலுங கொடுததனன. எ-று. (௬௧)

கமபமதகடகளிறரூன் றிலைவாழுங் கணபதிதன பெருவயிற்றைக் கண்டுவாடி, யுமபரெலாம் விழித்திருந் தா ரயிலவேற்சங்கை யுடையவறுமுகவனுங்கண்ணீராறு னன், பம்புசடர்க்கண்ணனுமோ நஞ்சுண்டான்மால் பய மடைநதா னுமையுமுடல பாதியரனுள், அம்புவியைப்ப டைத்திடுவ தவமதேயென் றயனுமன்னமிறங்காம லலை கின்றனே.

(இ-ள்.) மும்மதங்களோடுங் கூடிய யானைமுகமுடையவ ராய்த் திருத்தில்லையில் அமரும் கணபதியினுடைய பெருத்த

வயிற்றைப்பார்த்துப்பயந்து, தேவர்கள் இமையாதிருந்தார்கள். வேலாயுதத்தைக் கையில்வைத்திருக்கின்ற ஆறுமுகன், கண்ணீர் ஆருறுன். பொருந்திய அக்கினிக்கண்ணையுடைய சிவன் விடத்தையுண்டான், மகாவிஷ்ணு பயமடைந்தான், உமாதேவியும் தேகம் பாதியானுள், பிரமா உலகத்தைப்படைத்திடுதல் வீண் என்று அன்னமிறங்காமல் அலைந்தான். எ - று. ()

இமையாதிருத்தல்=கண்ணசையா திருத்தல். ஈராறு=பன்னிரண்டு. பயம்=ஜலம். அன்னம்=ஓதிமம். இவைகள் இயற்கையாயுள்ளதைவியந்து புதுமையாகக் கூறியிருக்கின்றார்.

காமமே குலத்தினையு நலத்தினையும் கெடுக்கவந்த களங்கம், காமமே தரித்திரங்களனைத்தினையும் புகட்டிவைக்குங் கடாரங், காமமே பரகதிக்குச் செல்லாமல்வழியடைக்குங் கபாடங், காமமே யனைவரையும் பகையாக்கிக் கழுத்தரியுங்கத்திதானே

(இ-ள்.) (பெண்கள் மயக்கமாகிய) காமமே சாதிநெறியையும், நன்மையையும் கெடுத்துவிடும்படியான குற்றம். வறுமைகளை நிறைத்துவைத்திருக்கும் பொக்கிஷம் முத்திமார்க்கத்திற்செல்லாம லடைத்திருக்குங் கதவு. அனைவரையும் பகையுண்டாக்கிக் கழுத்தறுக்கத்தக்க வாளாயுதமுமாம். எ - று. ()

## கலிவிருத்தம்.

தடாரிதண்ணுமை பேரிகைசல்லரிடக்கை
கடாகமெங்கணு மதிர்ந்திட வொலித்திடக்காலை
விடாதநாணகன்றன்னிய புருடரைவிழைந்தே
அடாதுசெய்தமங்கையரவசை யொலித்ததுபோலாமால்.

(இ-ள்.) பம்பை, மத்தளம், பேரிகை சல்லரி, இடக்கை, நகரா, முதலிய வாத்தியங்களதிர்ந்திடச் சப்தித்ததைப் பார்த்தலானது விடக்கூடாத வெட்கம் நீங்கி அன்னியநாயகர்களை இச்சித்து பொருந்தாத காரியத்தைச்செய்த பெண்களினது இழிவுக்குணங்கள் சப்தித்தலைக்கேட்டது போலாம். எ - று. ()

## வேறு.

தண்டுலமிளகின் றூள்புளியுப்பு தாளிதம்
பாத்திர மிதேஷடம்
தாம்புசீர்சேத்த முளைறுகோலடை சக்கி
முக்கியுங் கைகாந்தல
கண்டகங் காண்பான் பூணைஜமுஸ்தீப
கழல்குடையேவல் சிறுணடி
கமபளியூசி நூலடைக் காயபபை
காண்டகங் கண்டமேறறங்கு
துணடமுறியகாய் கபணடிகல வெண்ணெய்
துடடுடை பூட்டுமேகதறி
சொலலிய வெல்லாங் குறைவறத்திருத்தி
சொருகுகூடம்பலவிறுமனைதகட்டு
பெணகளுங்கிணையோ டுடனுறவாகளுறைய
பொருந்தில நீர்ந்தமல விருந்து
பிரசைஜுங்கங் குடிருந்து சமைத்தணைய்
பிரபபடல யாத்திரைக்கழகே.

(இ-ள்.) அரிசி, மிளகுபபொடி, புளி, உபபு, மிருதிப தாளிபபுககாரதத கறிவடகம், கயிறு, தணணீர பாததிர மிருகோல, வஸதிரஙகள, சக்கிமுக்கி அலலது நெருபபுண டாககுங்கருவி, கைகாநதல, அடுவாள, கலசணடி, பூசைக்கு சாமானகள, பாதரட்சை, குடை, வேலையாள, சிறுவணவு, பாதுபலகாரதிகள, கமபளி, ஊசி, நூல, வெறறிலையாதி கடுமபை, காணடகம, எழுததாணி, உடைஉறுகாயசருணஙகள், நெய், வெண்ணெய், கட்டு, பூட்டு, கதறி, இவைமுதலாக சொலலபபட்டவைகளெலலாங் குறைவிலலாமல திருத தோடு பலவைகளிலுஞ் சேகரிதத வஸதிரிகளை துணையோடு பானையாகளைததோடு பொருதத நிலைமையான ஜலம், நலலவிருந் திறகு ஜனஙகள தஙகும இடஙகளைடு, சமைததுணவு, பிர யாணஞ்செய்தல யாத்திரைக் காரருக்கழகாம. (எ - று.)

விவேகசிந்தாமணி மூலமும்-உரையும
முறறுபபெறறது.